724

# குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

விலை அணா 8

மலர் 12 கலைமகள் இதழ் 5


மன்மத - ஆவணி

## உள்ளுறை

பக்கம்

1. குச சரிதம்
—வி. எச். சுப்ரமண்ய சாஸ்திரி 2
2. தக்காளி மருந்து 14
3. அமெரிக்காவில் அரசியல் கட்சிகள்
—'மாணவன்' 17
4. பரதனின் துயரம்
—சு. ராஜகோபாலன் 23
5. நால்வர் மகாநாடு 40
6. கல்வித்துறையில் கட்டுப்பாடும் ஒழுங்கும் 94
7. செய்திக் கோவை 67
8. ரைட் சகோதரர்கள் 78

சுவர்ண மாளிகை



P.A.ராஜு செட்டியார் & பிரதர்

கோயமுத்தூர்

P-1-49

# குச சரிதம்

வி. எச். சுப்ரமண்ய சாஸ்திரி

இராமனுக்குப் பிறகு குசன் குசாவதியில் அரசுபுரிந்து வந்தான். ஒரு நாள் நள்ளிரவு. படுக்கையறை நான்கு பக்கங்களிலும் தாளிடப்பட்டிருந்தது. விளக்கின் சுடர் அசைவற்று எரிந்து கொண்டிருந்தது. வேலையாட்கள் அனைவரும் மெய்ம் மறந்து நித்திரையில் ஆழ்ந்திருந்தனர்.

குசன் திடீர் என்று விழித்துக்கொண்டான். அவன் எதிரில் ஒரு பெண் நின்றிருந்தாள். அவளை குசன் இதற்கு முன் கண்டதே இல்லை. நாயகனைப் பிரிந்திருக்கும் நிலையில் அவள் காணப்பட்டாள்.

அரசன் விழி தன் பேரில் பட்டதும் அவள் கை கூப்பினாள். "உமக்கு வெற்றி உண்டாகுக" என்று கூறினாள்.

நாற்புறமும் குசன் கண்கள் பாய்ந்தன. கதவுகள் தாளிடப்பட்டிருந்தன. தாளிட்டு மூடிய அவ்வறையில் கண்ணாடிக்குள் நிழல் போல் அவள் காணப்பட்டாள். அரசனின் ஆச்சரியம் கட்டில் அடங்கவில்லை. படுக்கையிலிருந்து பாதி எழுந்தான். அம்மாதைப் பார்த்து, "யார் அம்மா நீ? உன்னைக் காண நல்லவள்போல் தோற்றுகிறதே. மூடியிருக்கும் அறைக்குள் எவ்விதம் வந்தாய்? உனக்கு யோக சக்தி உண்டா? இருப்பது போல் தோன்றவில்லையே! உன் உடையைப் பார்த்தால் வைராக்யம் பூண்டவளாயும் தெரியவில்லை. புழுதிபடிந்த உன் மேனி பனிமூடிய தாமரை போல் தோன்றுகிறது. நீ யாரைச் சார்ந்தவள்? எதற்காக



அருணகிரிவிலாஸ்
சீயக்காய் பவுடர்
N. ஆறுமுகம் பிள்ளை.
காரைக்குடி.
B.S

என்னிடம் வந்தாய்? 'ரகுவம்சத்தார் புலன் அடக்க முடையோர். அவர் மனம் பிறர் மனைவி பால் செல்லாது' என்பதை நன்கு கருதி எனக்கு பதில் சொல்வாயாக" என்று கேட்டான்.

அப் பெண் கூறுவாள்: "உங்கள் தந்தை ஆண்டு வந்த அயோத்தியின் தேவதை நான். அவர் தம் இருப்பிடம் செல்லும்பொழுது அவ்விடத்து மக்களையும் அழைத்துச்சென்று விட்டார். இப்பொழுது நான் அனாதை. தங்கள் முன்னோர் என்னை ஆதரித்து ஆண்டுவந்தனர். நான் செழிப்புற்று குபேர பட்டணத்திலும் மேலாக இருந்தேன். அந்த வம்சத்தில் உதித்தவரல்லவா தாங்கள்? தாங்கள் குறையின்றி வாழும் பொழுதே வருந்தத்தக்க இந்நிலையை அடைந்து விட்டேனே! அப்பொழுது ஒளி மிகுந்த நூற்றுக் கணக்கான பெரிய வீடுகள் என்னை அழகு படுத்தின. இப்பொழுது என்னை ஆள அரசன் இல்லாமல் போகவே அவை அனைத்தும் இடிந்து சிதறிக்கிடக்கின்றன. அதனால் மேற்கில் மறைந்த சூரியனையும், கொடுங்காற்றில் சிதறிய மேகத்தையும் உடைய மாலைப்பொழுது போல் தோற்றுகிறேன்.

"ராஜமார்க்கத்தின் வழியாக காலில் சிலம்புஒலிக்க இரவுகளில் அழகிய பெண்கள் நடந்து நாயகன் வீட்டிற்குச் சென்று கொண்டிருப்பர். இப்பொழுது அங்கு பெண் நரிகள் வாயில் கொள்ளிக்கட்டையுடன் ஊளையிட்டுக் கொண்டு இரை தேடித் திரிகின்றன. நீர் ஓடைகளில் பெண்கள் இறங்கிக் கையால் ஜலத்தை அடித்து விளையாடுவர். அதைக் கேட்க மிருதங்கம் போலிருக்கும். இப்பொழுது அவ்வோடைகளில் காட்டு எருமைகள் தான் இறங்கி கொம்பால் அடித்து சத்தம் செய்கின்றன. அந்த நாளில் மயில்களை மக்கள் அன்புடன் வளர்த்து வந்தனர். வீட்டில் முழங்கும் மிருதங்க

ஒலியைக் கேட்டு அவை ஆடும். தற்காலம் காட்டுத் தீயில் பாதி எரிந்த தோகையோடு அவை மரத்தில் வாழ்கின்றன. அழகிய வீடுகளில் எழிலுற்ற பெண்மணிகள் செம்பஞ்சுக் குழம்பு தடவி உலராத காலுடன் மாடிப்படியில் நடந்து சென்றனர். அக்காலின் வடிவம் அங்கு பதிந்திருக்கும். அந்தோ! இப்பொழுதோ மான்களைக் கொன்று இரத்தம் பூசிய கால்களுடன் புலிகள் நடந்து செல்லுகின்றன.

"தாமரைப் பொய்கையில் இறங்கியிருக்கும் யானைகளுக்குப் பெண் யானைகள் தாமரைத் தண்டுகளைக் கொடுப்பதாக வீடுகளில் படங்கள் வரையப்பட்டுள்ளன. சிங்கங்கள் அங்கு புகுந்து கோபம் தாளாமல் அப் படயானைகளைக் கூட அடிக்கின்றன. தூண்களில் செதுக்கி வர்ணம் தீட்டிய அழகிய பெண் பொம்மைகளில் தற்காலம் பாம்புகள் சட்டை உரிக்கின்றன. அங்கு ஒட்டிக்கொண்ட அச் சட்டை அவற்றிற்கு மேல்வஸ்திரம் போல் தொங்குகிறது.

"முத்திழைத்த மாடிகளின் மேற்புறம் நிலவு நிழலித்துத் தெரியும்; அங்கு இப்பொழுது புல் முளைத்து மூடிக்கிடக்கிறது. தோட்டங்களில் பெண்கள் கொடிகளை அன்புடன் மெதுவாக வளைத்துப் பூப்பறித்திருந்தனர். காட்டுக் குரங்குகள் இப்பொழுது அச்செடிகளை ஒடித்து அழிக்கின்றன. பகலில் பெண்களும் இரவில் விளக்குகளும் வீடுகளின் ஜன்னல்களை அலங்கரித்திருந்தன. இப்பொழுதோ அங்கு பூச்சிகளின் வலைகள் தொங்குகின்றன. இப்பொழுது ஸரயூவின் மணலில் மக்கள் பூஜை செய்வதில்லை; ஜலத்தில் குளிப்பதுமில்லை; அதன் கரையிலிருக்கும் நீர் நொச்சிப் புதர்களும் தற்காலம் பாழாய்க் கிடக்கின்றன. அதைக் காண என் மனம் நொந்து துன்புறுகிறது. அதனால் தாங்கள் குசாவதியைவிட்டுத் தங்கள் வம்சத்தாரின் ராஜதானியாகிய அயோத்திக்குவாருங்கள்."

இவ்விதம் அயோத்தியின் தெய்வத்தின் வேண்டுதலை அரசன் உடனேயே, "ஆகட்டும்" என்று ஏற்ருன். அந்தத் தேவதையும் மலர்ந்த முகத்தோடு மறைந்து விட்டாள்.

அரசன் காலையில் அவ் அதிசய நிகழ்ச்சியை மந்திரிகளிடம் கூறினுன். அவர்களும் அயோத்தி தானுகவே குசனை அரசனுக ஏற்றதாகக் கருதிக் கொண்டாடினர்.

குசன் குசாவதியைத் தகுதியுள்ளோருக்குத் தானம் செய்தான். ஒரு நல்ல நாளில் அந்தப்புரத்தோடு அயோத்திக்குப் புறப்பட்டான். பெரும் சேனை அவனைப் பின்தொடர்ந்தது. அதைக் காண மேகத்தை வாயு தொடர்வது போலிருந்தது. அந்தப் பெரிய சேனையில் உயர்த்திப் பிடித்த கொடிகள் மரங்கள்போலும், யானைகள் மலைகள்போலும், தேர்கள் வீடுகள் போலும் இருந்தன. அதைக் காண ஒரு ராஜதர்னியே அசைந்து போவது போல் தோன்றியது.

சேனைகளின் அசைவால் மேலே கிளம்பிய புழுதியைக் கண்டவர் 'பாரம் தாளாத பூமி ஆகாயத்தில் கிளம்பிவிட்டதோ' என எண்ணினர். சேனையிலுள்ள யானைகளின் மதப் பெருக்கினுல் வழியில் கிளம்பிய புழுதி சேருக மாறிற்று. குதிரைகளின் குளம்பு பட்டு சேறும் பொடியாயிற்று. அந்தச் சேனை விந்தியச்சாரலில் பலவாறு பிரிந்து செல்லும் பொழுது அங்கு பாறைகளில் தடைப்பட்டு ஓலமிட்டுச் சிதறி ஓடும் ரேவா நதி போல் காட்சிஅளித்தது.

அரசன் வழி நடுவே குறுக்கிட்ட கங்கையைத் தாண்ட யானைகளை நிறுத்தி அவற்றின் மேல் நடந்து போகலானுன். அப்பொழுது ஜலத்திலிருந்து இறக்கைகளை அடித்துக் கொண்டு மேலே பறந்துசெல்லும் அன்னங்கள் அவனுக்குச் சாமரம் வீசுவது போல் தோன்றின. குசன் அந்தக் கங்கையைக் கண்டு கபிலரால் சாம்பலாகிய தன் முன்னேர்களைக் கரையேற்றிய தெய்வம் என பக்தியோடு வணங்கினுன்.

இவ்விதம் பல நாள் யாத்திரை செய்து முடிவில் குசன் ஸரயூ நதிக்கரையை அடைந்தான். அங்கு தன் முன்னோர் செய்த பல யாகங்களின் அறிகுறியான வேதிநடுவே நாட்டிய யூபஸ்தம்பங்களைக்கண்டான். பூத்துச் செழித்த மரங்களை அசைத்துக்கொண்டு குளிர்ந்த ஸரயூவின் அலைகளில் புரண்டு வரும் இளம் காற்று களைப்புற்று சேனையோடு வரும் அரசனை எதிர்கொண்டு அழைப்பது போல் தோன்றியது. மக்கள்பால் அன்புகொண்ட அந்த அரசன் சேனையைப் பட்டணத்திற்கு வெளியிலேயே நிறுத்தி விட்டான்.

பிறகு தச்சர் கொத்தர் முதலிய சிற்பிகள் அரசனின் கட்டளையைப் பெற்று வெயிலால் வறண்டு வெடித்திருக்கும் பூமியை மேகம் மழை பொழிந்து சீர்படுத்துவதுபோல் பட்டணத்தைப் புதுப்பித்தனர். வாஸ்து சாஸ்திரமறிந்தவரைக் கொண்டு சிறந்த கோயில்களுடன் கூடிய அப்பட்டணத்திற்கு முறைப்படி பூஜை செய்வித்தான்.

பிறகு இளம் பெண்ணின் உள்ளத்தில் ஆசை நாயகன் புகுவது போல், அரசன் அரண்மனைக்குள் சென்றான். தன்னை அண்டியிருப்போருக்கும் தகுதிக்கு ஏற்றவாறு வசதிகளைச் செய்து கொடுத்தான். அரசன் வந்தவுடன் லாயங்களில் குதிரைகள் நிறைந்து விட்டன. யானைகளும் யானைக் கொட்டகையில் நிரம்பி விட்டன. கடைத்தெருவில் விற்க சரக்குகளும் குவிந்து கிடந்தன. அதனால் அப்பட்டணம் உடல் முழுவதும் அணிகளை அணிந்து விளங்கும் பெண்போல் காட்சியளித்தது. காலக்கிரமத்தில் பட்டணம் பண்டைய அழகையும் பெற்றுவிட்டது. சம்பத்தும் அங்கு கொழித்திருந்தது. அதனால் அவ்வரசனுக்கு தேவேந்திரனோ குபேரனோ ஈடாகவில்லை.

இவ்வாறு குசன் அரசு செலுத்தி வரும்பொழுது ஒரு சமயம் வெயில் காலம் வந்தது. பெண்கள் முத்துக் கோத்த

நுனியை உடைய மேலாடையைப் போர்த்தியிருந்தனர். கழுத்தில் முத்துமாலையும் மூச்சுக் காற்றில் பறக்கும் மெல்லிய ஆடைகளை இடையிலும் தரித்தனர். இமாலயத்திலிருந்து பனி உருகி நதிகளின் வாயிலாகப் பெருகியது. அதைக் காண ஆதித்தன் தன்னைவிட்டு தெற்கு திசையை அடைந்ததால் வடதிசை கண்ணீர் பெருக்குவது போல் தோன்றியது. பகல் நீண்டு உஷ்ணமுற்று வந்தது. இரவு தேய்ந்து கொண்டிருந்தது. அந்நிலை கோபமுற்று ஒற்றுமையில்லாமல் இருக்கும் காதலர்களை நினைவூட்டியது. நாளுக்கு நாள் நீர்நிலையங்களில் ஜலம் வற்றிப் பாசி மேலே கிளம்பியது. ஜலத்தில் மூழ்கிக் கிடந்த படிகளும் ஒவ்வொன்றாக வெளிப்பட்டன. தாமரைமலர்களும் நீண்ட தண்டுகளுடன் விளங்கின. மாலைப்பொழுதினில் மலர்ந்த மல்லிகைகளில் ஒவ்வொன்றிலும் வண்டினம் ரீங்காரத்தோடு உட்கார்ந்து உட்கார்ந்து சென்றது. அதைக் காண வாய்விட்டுப் பூக்களை ஒவ்வொன்றாக வண்டுகள் எண்ணுவது போல இருந்தது. செல்வர் வெயில் வேளையை, 'தாராகிருஹங்களில்'யந்திரங்கள் ஜலத்தை வாரித் தெளிக்க,சந்தன நீரால் அலம்பிய சலவைக் கற்களில் படுத்துக் கொண்டு கழித்தனர். வசந்தம் போனதால் மன்மதன் பல மிழந்திருந்த போதிலும் மாலையில் குளித்துக் கோடாலி முடித்திட்டு, புகை பிடித்து, அந்தியில் மலர்ந்த மல்லிகை சூடிய எழில் தழைத்த பெண்களின் குழலில் அவன் பலமுற்று விளங்கினன். மணம் கமழும் மாம்பூவும்,பழைய கள்ளும், பாதிரிப் பூவும் காமிகளின் குறைகளை அகற்றிவிட்டன. மக்களின் துயரத்தை அகற்றும் அரசனும் தாபத்தைத் தீர்க்க உதிக்கும் சந்திரனும் அந்தச் சமயத்தில் ஒன்றுபோல் மாந்தரின் கவனத்தைக் கவர்ந்தனர்.

அந்த வெயில் காலத்தில் ஒரு நாள் மதமுள்ள ராஜ ஹம்சங்கள் விளையாடுவதும் கரையிலிருக்கும் கொடிகளின்

மலர் சொரிந்து மணமுற்றிருப்பதும் ஆன ஸரயூ ஜலத்தில் மாதர்களுடன் இறங்கி விளையாட அரசன் ஆவல் கொண்டான். உடனே ஸரயூவின் கரையில் ஒரு கூடாரத்தை அடிக்கச் செய்தான். செம்படவர்களால் முதலைகளை அகற்றினான். ஆசைக்கு ஏற்றவாறு இறங்கி விளையாடலானான்.

அரசனுடைய அந்தப்புரப் பெண்மணிகள் படிக்கட்டில் ஒருவருக்கொருவர் இடித்துக்கொண்டு வேகமாக இறங்கினர். அவர்களுடைய தோள் வளைகள் மோதிக்கொண்டு சத்தம் செய்தன. கால் சதங்கைகளும் ஒலித்தன. இதனால் நதியிலிருந்த அன்னங்கள் பயந்து விலகிச் சென்றன.

பெண்கள் ஒருவருக்கொருவர் ஜலத்தை வாரி யிறைத்துக் கொண்டனர். மூழ்கி விளையாடுவதில் அவர்களுக்கு அரசன் ஆசை காட்டி. அவர்கள் கேளிக்கைகளை ஓடத்தில் ஏறிப் பார்த்து இன்புற்றிருந்தான். தனக்கு அருகில் இருந்து சாமரம் வீசும் வேடுவப் பெண்ணைப் பார்த்துக் கூறலானான்:

"இதோ பார்த்தாயா? என் அந்தப்புரப் பெண்களின் மேனியில் தடவிய குங்குமப் பூச்சு ஜலத்தில் கலக்கிறது. அதனால் ஸரயூவின் பிரவாகம் அந்திக் காலத்து வானம் போல் காணப்படுகிறது. இதோ பெண்மணிகளின் கண்களில் மையை அலம்பிவிட்டுச் சிவப்பைக் கொடுத்து விட்டது ஸரயூவின் ஜலம்.

"இங்கு பார். உடம்பின் பாரத்தால் தம்மையே தூக்கிச் செல்லமுடியாத இப்பெண்ணரசிகள் ஆசையால் ஒருவாறு நீந்துகின்றனர். பெண்களின் காதில் அணிந்த வாகைப்பூ ஜலத்தில் விழுந்து மிதக்கிறது. அதைக் கண்டு பாசி எனக் கருதி மீன்கள் துள்ளி எழுகின்றன. அழகிய சுழலும்

சிறிய அலைகளும் சக்கிரவாகப் பறவைகளும் பெண்களின் உறுப்புக்களை ஒத்திட்டுப் பார்த்து அன்புறுமாறு அருகில் இருக்கின்றன. ஜலத்தில் தட்டிக்கொண்டு சில பெண்கள் பாடுகின்றனர். அதைக் கேட்டுக் கரையில் இருக்கும் மயில்கள் தோகையை விரித்து ஆடுகின்றன. ஜலத்தில் மெய்ம்மறந்து விளையாடுகின்ற இப்பெண்மணிகளின் முத்துமாலைகள் அறுந்து விழுந்துவிட்டன. ஆயினும் தூய ஜலத்துளிகள் அவருடலில் ஒட்டிக்கொண்டு முத்தின் அழகை ஊட்டுகின்றன. இதோ சிலர் தோழியின் முகத்தில் ஜலத்தை வாரியிறைக்கின்றனர். முன் நெற்றியில் படிந்த மயிர்களின் வழியாக தலையில் அணிந்த குங்குமத்துடன் கலந்து ஜலம் வழிகிறது. அவிழ்ந்த கூந்தலும், அழிந்த முக அலங்காரமும், பெருகிய முத்துமாலையும் ஜலத்தில் விளையாடும் பெண்களுக்குத் தனிப்பட்ட அழகையே உண்டாக்குகின்றன."

இவ்விதம் கூறிக்கொண்டு குசன் தானும் அவருடன் ஜலத்தில் இறங்கி விளையாடலானான். அதைக் காண ஆண் யானை, பெண் யானைகளோடு கூடி ஜலக்ரீடை செய்வது போலிருந்தது. அம்மாதரசிகள் அரசனுடன் சேர்ந்த பொழுது முற்றிலும் அழகுற்று விளங்கினர். முத்துக்களே அழகுதான். இடையே இந்திர நீலமும் கலந்தால் கேட்க வேண்டுமா? பெண்கள் தங்கக் குழாய்களைக் கொண்டு அன்பினால் அவன் பேரில் வர்ணம் கலந்த ஜலத்தை வாரி இறைத்தனர். அப்பொழுது அரசன் நற்செங்கல் பொடி நிறைந்த மலையரசன்போல் விளங்கினான். இவ்விதம் அந்தப்புரப் பெண்களுடன் விளையாடும் அரசன் ஆகாச கங்கையில் தேவ மாதரோடு விளையாடும் தேவேந்திரனைப் போல் காணப்பட்டான்.

குசன் இவ்விதம் விளையாடிக்கொண்டே இருக்கும் பொழுது அவன் கையில் அணிந்திருந்த அணி ஒன்று

அவனையறியாமலேயே ஜலத்தில் விழுந்து மூழ்கிவிட்டது. அகஸ்திய முனிவர் இராமனுக்குக்கொடுத்தது அந்த அலங்காரம். அதை இராமன் தம் மகனுக்குக் கொடுத்தார். அதை அணிந்திருப்பவனுக்குத் தோல்வி கிடையாது. ஆகவே அந்த அலங்காரத்தைத் தேடி எடுத்துவிட அவன் தீர்மானித்தான். உடனே ஜலத்தில் முழுகும் திறமை கொண்ட செம்படவர்களை, அவ் அணியைத் தேடி எடுத்து வர உத்தரவிட்டான். ஆனால் அவர்கள் தேடிப் பார்த்தும் பயன்படவில்லை.

சற்றும் முகவாட்டமில்லாமல் அரசனிடம் அவர்கள் கூறினர்: "அரசே, நாங்கள் முயன்றோம். தங்கள் ஆபரணம் கிடைக்கவில்லை. இந்த மடுவில் வாழும் குமுதன் என்ற நாக அரசன் பேராசையால் அதை எடுத்துவிட்டான். அதில் சந்தேகமேயில்லை."

இதைக் கேட்ட அரசன் கோபமுற்றான். அவன் கண் சிவந்தன. வில்லை எடுத்து நாண் ஏற்றினான். கரையில் இருந்தவாறே பாம்புகளை அழிக்கத் தீர்மானித்து, கருடாஸ்திரத்தைக் கையில் எடுத்துத் தொடுத்தான். உடனேயே அம்மடு கலக்கமுற்றுக் கொந்தளித்தது. அதில் கொடியதோர் சத்தமும் கிளம்பியது.

சிறிது நேரத்தில் நாகராஜன் தன் மகள் குமுதவதியை அழைத்துக்கொண்டு வெளி வந்தான். அதைக் காண பாற்கடலைக் கடைந்த சமயம் லக்ஷ்மியை முன்னிட்டுக்கொண்டு கற்பக விருக்ஷம் வந்தது போல் இருந்தது.

அரசன் குமுதன் கையில் ஆபரணத்துடன் வந்திருந்ததைப் பார்த்தான். உடனே அஸ்திரத்தை ஸம்ஹாரம் செய்துகொண்டான். பெரியோருக்கு வணக்கம் காட்டினால் பெரியோரிடம் கோபம் நிலைக்காதல்லவா?

நாகராஜன் குமுதன் தலை வணங்கி அரசனிடம் சொல்லுவான்: "தாங்கள் மனிதனுய் அவதரித்த பகவான் நாராயணனின் வேற்று உரு, மகன் என்பதை நான் உணர்வேன். தங்கள் தயவை நாடும் நான் தங்களுக்கு இடையூறு செய்வேனு? இப்பெண் பந்து விளையாடிக்கொண்டிருந்தாள். ஓங்கி அடித்த பந்து மேலே கிளம்பியது. அதை அவள் நிமிர்ந்து பார்த்தாள். அப்பொழுது ஆகாயத்திலிருந்து தாரகை விழுவது போல் ஒளியுடன் விழும் இந்த அணியைப் பார்த்தாள். சிறு வயதிற்கேற்ற ஆவலினுல் எடுத்துவிட்டாள். முழங்கால் வரையில் தொங்குவதும் நாண் கயிறு பட்டுத் தழும்புற்றதும் பூமிக்குக் காப்பு அளிப்பதுமான தங்கள் கையில் இதை அணிந்துகொள்ளுங்கள். இவள் பெயர் குமுதவதி. இவள் தங்கள் திருவடியில் வெகு காலம் பணி செய்து தான் செய்த தவறை அகற்றிக் கொள்ள விரும்புகிருள். தாங்கள் மறுக்காமல் இவளை ஏற்க வேண்டும்."

இவ்விதம் குமுதன் கூறியதைக் கேட்ட அரசன் அவன் சம்பந்தத்தைக் கொண்டாடி ஆமோதித்தான். நாகராஜனும் மிகுந்த சந்தோஷத்தோடு அரசனிடம் அவனுடைய ஆபரணத்தையும் தன் குலத்திற்கே அணியாகிய குமுதவதியையும் கொடுத்தான்.

அரசன் முறைப்படி அக்கினி சாட்சியாக அவளை மணந்துகொண்டான். அப்போது ஆகாயத்தில் துந்துபி வாத்தியங்கள் முழங்கின. மேகங்கள் மணம் கமழும் மலர்களைச் சொரிந்தன.

விஷ்ணுவின் மகனை குசனேடு சம்பந்தம் செய்ததால் குமுதனுக்குக் கருட பயம் நீங்கி சுகமாக வாழ்ந்தான். குமுதன் நட்பினுல் குசன் ராஜ்யத்திலும் பாம்புகள் தலைகாட்டவில்லை. இவ்விதம் இருவரும் இன்புற்று வாழ்ந்தனர்.

காலக்கிரமத்தில் குமுதவதி அதிதி என்ற மகனைப் பெற்ருள். அவன் தந்தைக்கேற்ற குணங்களுடன் விளங்கினன். அவன் வளர்ந்து வரும் நாளில் ஒரு சமயம் இந்திரனல் உதவிக்கு வேண்டப்பட்ட குசன் தேவலோகம் சென்ருன். தம் முன்னேர்களைப் போல் அசுரரோடு திறம்படப் போர் செய்தான். முடிவில் பகைவனை வென்ருன். ஆனல் தானும் அவனல் அடிபட்டு வீரர்களுக்கேற்ற நிலைமை அடைந்தான். பிறகு அரசன் போருக்குப்போகும் பொழுது கொடுத்திருந்த உத்தரவைப் பின்பற்றி மந்திரிமார்கள் அவன் மகன் அதிதியை அரசனுக்கினர். அதிதி நெறி தவருமல் உலகை ஆண்டு வந்தான்.

# தக்காளி மருந்து

மக்களையும், ஆடு மாடுகளையும், பயிர் பச்சைகளையும் வருத்துகின்ற சில நோய்களைப் போக்கும் கிருமி கொல்லி மருந்தைத் தக்காளியிலிருந்தும் எடுக்கலாம் என்று இப்பொழுது ஆராய்ச்சியாளர் கண்டு பிடித்திருக்கின்றனர்.

தக்காளிச் செடி முதன் முதல் தென் அமெரிக்காவில் ஆண்டீஸ் மலையில் காடாக வளர்ந்து கிடந்தது. அதனைத் தம் நாட்டுக்குக் கொணர்ந்து அமெரிக்கர் அழகுச் செடியாக வளர்த்தனர். 1820 வரை அவர்கள் தக்காளிப் பழத்தை நஞ்சென்றே கருதினர்.

இன்று அமெரிக்காவில் அபரிமிதமாக விளையும் காய் கறிகளில் தக்காளி மூன்றாவதாக விளங்குகிறது. மற்ற நாடுகளிலும் தக்காளி பிரபலமாகியுள்ளது.

இன்று, அமெரிக்க விவசாய இலாகா விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியால் தக்காளி மருந்தாகி உதவக்கூடிய கிருமி கொல்லி மருந்துக்குத் தக்காளிச் செடி ஆதாரமாகியிருக்கிறது.

புசேரியம் என்னும் ஒருவகைப் பூசணம் பிடிக்க வொட்டாதபடி தடுக்கும் கிருமி கொல்லிச் சத்தொன்று தக்காளியின் தண்டிலிருந்தும் இலையிலிருந்தும் கிடைத்துள்ளதென்று அமெரிக்க விவசாய இலாகா விஞ்ஞானிகள் அண்மையில் தெரிவித்தனர். இந்தப் பூசணந்தான் தக்காளி முதலிய பயிர் வகைகளை அழித்துப் பெருஞ் சேதம் விளைவிப்பது. இதனை ஒழிக்கும் கிருமி கொல்லிச் சத்துக்கு

"டொமாட்டைன்" அல்லது "டொமாட்டின்" என்று பெயர் கூறுகின்றனர். அந்தப் பூசணம் பற்றாத தக்காளிச் செடியிலெல்லாம் இந்தச் சத்து இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இச் சத்தைப் பற்றி ஆராய்ந்தவர்கள் முதன் முதல் பூசணத்தை ஒழிப்பதற்கே வழி தேடினர். பின்னர் நடந்த ஆராய்ச்சிகளால், மனிதருக்கும் கன்றுகாலிகளுக்கும் சில நோய்களை உண்டாக்கும் பூசணங்களையும் "டொமாட்டி"னால் தடுக்கலாம் என்று தெரிய வந்தது. சரும வியாதிகள், கடுமையான சில உள் வியாதிகள் இவற்றை உண்டு பண்ணும் பூசணங்களைப் பரிசோதனைக் குழாய்களில் வளர்த்து "டொமாட்டினை"ப் பிரயோகித்துப் பார்த்ததில், அப் பூசணங்களை இச்சத்து வேகமாகத் தாக்குகிறது என்றும் தெரிய வந்தது.

இப்பொழுது அர்ஜென்டைனாவைச் சேர்ந்த மருந்துக் கம்பெனி ஒன்று "டொமாட்டினை" வியாபாரத்துக்காகத் தயாரித்து வருகிறது. "டொமாட்டி"னால் செய்த களிம்பு ஒன்று தண்ணீரில் கரையக் கூடியது; அதில் நூற்றுக்கு 5 பங்குதான் "டொமாட்டின்." இக் களிம்பு பூசணங்களால் உண்டாகும் சரும வியாதிகளைக் குணமாக்க மிகவும் சிறந்த மருந்தாக உள்ளது. அம் மருந்தைப் பொடியாகவும் பயன் படுத்தலாம். இம் மருந்து நாற்றமற்றது; அதனால் எரிச்சல் ஏற்படுவதுமில்லை.

"டொமாட்டி"னைக் கொண்டு அமெரிக்க விவசாய இலாகா விஞ்ஞானிகள் புதிய இரசாயனப் பொருள் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதற்கு "டொமாட்டிடைன்" என்று பெயரிட்டுள்ளனர். பின்னர் நடந்த ஆராய்ச்சிகளால், "கார்ட்டிஸோன்" என்னும் மருந்து செய்ய "டொமாட்டிடைன்" உபயோகமாகும் என்பது

தெரிந்தது. இல்வாதம் முதலிய நோய்களைத் தீர்க்கக் "கார்ட்டிஸோன்" அருமருந்தாகும்.

"டொமாட்டின்" எடுப்பதற்குத் தக்க முறையில் தக்காளியைப் பெருவாரியாகப் பயிர் செய்து விற்கலாம் என்பதும் ஆராய்ச்சியால் தெரிகிறது.

"டொமாட்டிடை"யின் இரசாயன அமைப்பைப் பற்றிய ஆராய்ச்சியெல்லாம் அநேகமாக முடிந்து விட்டது. அமெரிக்க விஞ்ஞானிகள் அதன் அமைப்பைக் காணும் போது, அது போன்ற வேறு 20 இரசாயனப் பொருள்களைத் தயார் செய்தனர். அவையும் பிணிபோக்குவதற்குப் பெரிதும் உதவக் கூடும் எனத் தெரிகிறது.

# அமெரிக்காவில் அரசியல் கட்சிகள்

'மாணவன்'

அமெரிக்கர் எப்பொழுதும் இரண்டு அரசியல் கட்சிகளையே விரும்புகின்றனர். ஒரே ஓர் அரசியல் கட்சி நாட்டிலிருக்குமானால், அக் கட்சியில் பிளவு உண்டாக்கி அதனை இரண்டு கட்சிகள் ஆக்கிவிடுவார்கள்; அல்லது ஒரு புதிய கட்சியை ஆரம்பிப்பார்கள். மூன்றாவது கட்சி ஒன்று முளைக்குமானால், அதனைத் தேர்தல் காலத்தில் நசுக்கி விடுவார்கள்.

அமெரிக்கா குடியேற்ற நாடாக இருந்த பொழுது விக்ஸ் (Whigs) டோரீஸ் (Tories) என்ற இரண்டு கட்சியினர்தான் இருந்தார்கள். டோரீஸ் கட்சியினர் இங்கிலாந்திலுள்ள அரசரை அல்லது அவரது பிரதிநிதியை ஆதரிப்பவர்கள். விக்ஸ் கட்சியினர் சுயாட்சி வேண்டுமென்று கூறிய தேசபக்தர்கள். இரண்டு கட்சியினரின் கொள்கைகளும், ஒன்றுக்கொன்று நேர் விரோதமானவை. இந்த விரோதம் 1775 ஆம் வருஷம் சண்டையாக மாறிற்று. டோரீஸ் கட்சியினர் தோல்வியுற்று கானடாவுக்கும் பஹாமாஸ் தீவுகளுக்கும் ஓடினர்.

அமெரிக்க அரசியல் அமைப்பில் அரசியல் கட்சிகளைப் பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. சுதந்திரப் போருக்குப் பின் உருவான எல்லா நாடுகளையும் போல, அமெரிக்காவும் ஒரே கட்சி அரசாங்கத்துடன்தான் ஆரம்பமாயிற்று. அமெரிக்காவின் முதல் ஜனதிபதி ஜார்ஜ் வாஷிங்டனும்

அப்பொழுதிருந்த முக்கியமான தலைவர்களும் அரசியல் கட்சிகளை விரும்பவில்லை. அரசியல் கட்சிகள் தங்கள் தங்கள் கொள்கைகளையே வற்புறுத்துமென்றும், பூகோளரீதியாக, நாட்டின் வடக்கு, தெற்கு முதலிய பகுதிகளிலிருந்து தோன்றும் அரசியல் கட்சிகள் தங்கள் தங்கள் பகுதிகளின் நன்மையைக் கருதுமே தவிர நாட்டின் நன்மையை முக்கியமாகக் கருத மாட்டா என்றும், இம் மாதிரியான அரசியல் கட்சிகளுக்கிடையே பூசல்கள் முற்றி அது போராக வந்து நாட்டின் நலனைக் கெடுத்து விடும் என்றும் வாஷிங்டன் கூறினார்.

என்ற போதிலும், வாஷிங்டனின் ஜனாதிபதி பதவிக் காலம் முடியும் தருணத்தில், அடுத்த ஜனாதிபதி யார் என்ற விஷயத்தில் மக்களிடையே கருத்து வேற்றுமை தோன்றியது.

ஒரு பக்கம் பெடரலிஸ்ட் (Federalist) கட்சி. இக் கட்சியில் பணக்காரர், வியாபாரிகள், நகரத்தில் வசிக்கும் மத்திய தர வகுப்பினர் முதலியோர் இருந்தனர். மற்றொரு கட்சி ரிபப்ளிக்கன் (Republican) கட்சி. இதில் நாட்டுப்புறத்து மக்கள், விவசாயிகள், நகரத்திலுள்ள தொழிலாளர் முதலியோர் இருந்தனர். இக் கட்சியின் தலைவர் தாமஸ் ஜெபர்சன்.

*1796* ஆம் வருஷத்து தேர்தலில் பெடரலிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஜான் ஆடம்ஸ் ஜனாதிபதியானார். *1800* ஆம் வருஷம் ரிபப்ளிக்கன் கட்சியைச் சேர்ந்த தாமஸ் ஜெபர்சன் ஜனாதிபதியானார்.

*1800* ஆம் வருஷத்தில் ஜெபர்சனும் அவரது கட்சியினரும் தங்களை 'ரிபப்ளிக்கன்' என்றே அழைத்தனர்; அதாவது அவர்கள் முடியாட்சிக்கு எதிரானவர்கள் என்னும் பொருளில். அந்தச் சமயத்தில் பிரான்ஸ் தேசத்தில்

சரித்திரப் பிரசித்தி வாய்ந்த புரட்சி ஏற்பட்டது. இப் புரட்சி, அமெரிக்கப் புரட்சியின் பதில் வெட்டு என்று ரிபப்ளிக்கன் கட்சியினர் கருதியதால் பிரெஞ்சுப் புரட்சியை ஆதரித்தனர். பெடரலிஸ்ட் கட்சியினர் பிரெஞ்சுப் புரட்சியை எதிர்த்தனர். பிரான்ஸ் தேசத்தின் "பெரு மக்கள்" கொலை செய்யப்படுவதைக் காண அவர்களுக்குச் சகிக்கவில்லை. பெடரலிஸ்ட் கட்சியினர் ஜெபர்சனையும் அவர் கட்சியினரையும் "டெமொகிராட்ஸ்" (Democrats) அதாவது பிரெஞ்சுப் புரட்சியை ஆதரிப்பவர்கள் என்று அழைத்தனர். அந்தக் காலத்தில் (Democracy) 'டெமொக்ராஸி' என்ற வார்த்தைக்கு "கலகக்காரர் ஆட்சி" (Mob-Rule) என்று பொருள் கொண்டனர்.

பெடரலிஸ்ட் கட்சி மங்கி மடிந்தது; 1820 ஆம் வருஷத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கு அபேட்சகரைக் கூட நிறுத்த முடியாமல் போய்விட்டது. மீண்டும் அமெரிக்காவில் ஒரே கட்சியின் அரசாங்கம் நடைபெற்றது.

ஆனால் ஜெபர்சனின் ரிபப்ளிக்கன் கட்சியில் கருத்து வேற்றுமை உண்டாகவே அவர்கள் இரண்டாகப் பிரிந்தனர். ஒன்று நாஷனல் ரிப்ளிக்கன் கட்சி; மற்றொன்று டெமொகிராடிக் ரிபப்ளிக்கன் கட்சி. 1824 ஆம் வருஷத்தில் முந்திய கட்சியும், 1828 ஆம் வருஷத்தில் பிந்திய கட்சியும் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றன.

1832 ஆம் வருஷம் நாஷனல் ரிபப்ளிக்கன் கட்சி, விக்ஸ் (Whigs) ஆதிக்கத்தில் வந்தது. இந்த விக்ஸ் என்பவர்கள் சுதந்திரப் போரில் ஈடுபட்ட தேசபக்தர்கள் அல்ல. இவர்கள் பிற்போக்கானவர்கள். தேர்தலில் வாக்கு சேகரிப்பதற்காகவே இப் பெயரை உபயோகித்து 1840, 1848 வருஷ ஜனாதிபதி தேர்தல்களில் வெற்றி பெற்றனர்.

1850 ஆம் வருஷம் அமெரிக்க நீக்ரோ அடிமைகளின் பிரச்னை பெரிதாக வளர்ந்தது. விக்ஸ் கட்சியினருக்கும் டெமொகிராடிக் ரிபப்ளிக்கன் கட்சியினருக்கும் அடிமைப் பிரச்னை விஷயத்தில் அவர்கள் கட்சிகளுக்குள்ளே பிளவு உண்டாயிற்று. நாட்டின் தெற்குப் பகுதியிலுள்ளவர்கள் அடிமைகள் இருக்க வேண்டும் என்றூர்கள். நாட்டின் வடக்குப் பகுதியிலிருப்பவர்கள் அடிமைத் தனத்தை ஒழிக்க வேண்டும் என்றூர்கள். விக்ஸ் கட்சி செத்தது. அடிமை ஒழிப்புக் கொள்கையுள்ள ஒரு கட்சி ஆரம்பமாயிற்று. அதற்கு ரிபப்ளிக்கன் கட்சி என்று பெயர். இக் கட்சி ஆபிரகாம் லிங்கனைத் தனது தலைவராக நியமித்தது. 1860 ஆம் வருஷம் ஆபிரகாம் லிங்கன் ஜனதிபதியானூர்.

தற்பொழுது இரண்டே கட்சிகள். ஆபிரகாம் லிங்கன் தலைமையிலுள்ளது ரிபப்ளிக்கன் கட்சி. டெமொகிராடிக் ரிபப்ளிக்கன் என்பது டெமொகிராடிக் கட்சி என்று அழைக்கப்பட்டது. அது முதல் இதுவரை, சுமார் நூறு வருஷங்களாக, அமெரிக்காவில் இந்த இரண்டு முக்கியமான அரசியல் கட்சிகள்தான் இருக்கின்றன. அமெரிக்காவில் அரசியல் கட்சிகள் தோன்றிய வரலாறு இதுதான்.

ஐரோப்பாவில் பல நாடுகளில் அரசியல் கட்சிகள் மூலம் அரசாங்கம் நடத்துகிறூர்கள். அதிக பலமுள்ள கட்சி மந்திரிசபை அமைக்கிறது. அக் கட்சியினர் பார்லிமெண்டில் கொண்டு வரும் தீர்மானம் தோல்வியுற்றுல் உடனே மந்திரிசபை ராஜிநாமாச் செய்துவிடும். எந்தத் தனிக் கட்சிக்கும் போதிய ஆதரவு இல்லாவிட்டால், சில கட்சிகள் சேர்ந்து கூட்டு மந்திரிசபை அமைப்பார்கள். ஆனுல் அமெரிக்க அரசியல் முறையில் இவ்வாறு நடைபெருது.

நாட்டில் பல கட்சிகளிருப்பது, அதிலும் ஒன்றுக்கொன்று நேர் முரணுன கொள்கையுடைய அரசியல்

கட்சிகள் இருப்பது மிகவும் அபாயமானது என்று அமெரிக்கர் கருதுகின்றனர். இம் மாதிரி பல முரணுன அரசியல் கட்சிகளை வளர விட்டால், நாட்டின் சுதந்திரமோ அல்லது வீழ்ச்சியோ ஒவ்வொரு தேர்தலின் முடிவைப் பொறுத்த தாகி விடும் என்று அமெரிக்கர் கருதுகின்றனர்.

அமெரிக்க அரசியல் முறையில் குறைபாடுகள் இருக்கின்றன என்று கருதிய போதிலும் அதில் நன்மைகளும் இருக்கின்றன என்று அமெரிக்க ஆசிரியர் காயில் கூறுகிருர். சுதந்திரமுள்ள அரசாங்கத்தை நடத்துவதற்கு, இரு கட்சிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வசதியை வாக்காளர்களுக்கு அமெரிக்க அரசியல் அளிக்கிறது. ஒரு கட்சியை விட மற்ருெரு கட்சி நாட்டின் நலனையும் அபிவிருத்தியையும் அதிகமாகக் கவனிக்கும் என்றும், வீண் விரயத்தையும் லஞ்சத்தையும் ஒழிக்கப் பாடுபடும் என்றும் வாக்காளர் கருதலாம்.

அமெரிக்காவில் ரிபப்ளிக்கன், டெமொகிராட்ஸ் என்ற இரண்டே கட்சிகள்தான் இருக்கின்றன. தொழிலாளர்களுக்காகத் தனி அரசியல் கட்சி கிடையாது. இரண்டு முக்கிய அரசியல் கட்சிகளும் தேர்தல் காலத்தில் தொழிலாளர் வாக்குகளை எதிர்பார்த்து நிற்கின்றன. எந்தக் கட்சி தொழிலாளர் நலனுக்கு அதிக சலுகைகள் தருவதாகக் கூறுகிறதோ அந்தக் கட்சியினரை ஆதரிக்கும்படி தொழிலாளர் தலைவர்கள் அறிக்கை வெளியிடுவார்கள். ஆனுல் தொழிலாளர் தலைவர்கள் ஒரே கட்சியைத் தேர்தலில் ஆதரிப்பதில்லை. ஒரு ஸ்டேட்டில் ரிபப்ளிக்கன் கட்சி அபேட்சகரையும், மற்ருெரு ஸ்டேட்டில் டெமொகிராட்ஸ் அபேட்சகரையும் ஆதரிப்பார்கள். யார் பதவிக்கு வந்தாலும் தங்களுக்கு நன்மை கிடைக்கவேண்டுமென்பதே தொழிலாளர் ஆவல். ஆனுல் தொழிலாளர் தலைவர்கள் சொல்லுகிறபடி தொழிலாளர் எல்லோரும் வாக்கு அளிப்ப

தில்லை. தங்களுக்கு யார் பிரியமோ அவர்களுக்கே தொழிலாளர் வாக்கு அளிப்பார்கள்.

இதைத் தவிர, விவசாயிகள் மகாசபை, பெண்கள் சங்கம், வியாபாரச் சபைகள், தியாகிகள் சங்கம் முதலிய பல ஸ்தாபனங்களிடமிருந்தும் தேர்தல் காலத்தில் அரசியல் கட்சிகள் ஆதரவு தேடும்.

இந்த இரண்டே அரசியல் கட்சிகள் விஷயத்தில் அமெரிக்கர்களுக்கு ஒரே ஒரு நம்பிக்கை உண்டு. தாங்கள் வாக்களித்த கட்சிக்கு எதிர்க் கட்சி ஜெயித்தாலும் அதனுல் எந்த விதமான ஆபத்தும் இல்லை. ஏனென்ருல் இரண்டு கட்சிகளும் ஜனநாயகக் கட்சிகள். இரண்டும் அமெரிக்காவுக்குச் சாதகமானவை—அதாவது அமெரிக்காவின் நன்மையே இரண்டு கட்சிகளின் கொள்கையும். இந்த இரண்டு கட்சிகளுக்கும் நேர் முரணுன கொள்கை ஒன்றுமே இல்லை. இந்த இரண்டு கட்சிகளின் வெளிநாட்டு அரசியல் கொள்கை ஒன்றே. உள்நாட்டு விவகாரங்களில், ஒரு சில அம்சங்களில் இரண்டு கட்சிகளுக்கும் கருத்து வேற்றுமை இருக்கும். இதனுல் தேசீய நலனுக்கு ஆபத்து வராது. இந்த எண்ணத்தின் காரணமாகவே பல அமெரிக்கர்கள் தேர்தலைப் பற்றி அக்கறை காட்டாமலும் வாக்களிக்காமலும் இருக்கிருர்கள் என்று தோன்றுகிறது.

அமெரிக்காவின் இரண்டு அரசியல் கட்சிகளையும் அநேகமாக இரட்டையர்கள் என்றே சொல்லலாம். இந்த இரண்டுக்கும் எப்படி வித்தியாசம் கண்டுபிடிப்பது என்று கேட்டபொழுது, "ஒன்று அதிகாரத்திலிருப்பது, மற்ருென்று எதிர்க் கட்சியாக இருப்பது" என்று ஒருவர் கூறினர்.

# பரதனின் துயரம்

சு. ராஜகோபாலன்

**ம**ன்னவனின் மரணம் நாட்டிலுள்ளோருக்கும் அரண்மனையிலுள்ளோருக்கும், ஏன் அவன் மனைவிமார் களுக்குங்கூட உடனே தெரியவில்லை. பொழுது புலர்ந் ததும் வழக்கம் போல் அரண்மனைப் பாடகர்களும் பணி யாட்களும் அங்கு வந்து குழுமினர். அரசனை எழுப்ப மதுரமான கீதங்களைப் பாடவாரம்பித்தனர். அந்தப்புர ஸ்திரீகளும் அருகில் வந்து அரசனை எழுப்புவதில் ஈடுபட் டனர். ஆனால் முடியவில்லை. அரசனைத் தொட்டுப் பார்த் ததில் அவயவங்கள் ஒட்டமில்லை. உயிர் போய்விட்ட தாகத் தெரியவந்தது. கதிகலங்கிவிட்டனர். வெள்ளம் ஓடி வரும்போது பசும் புற்கள் படும் அவதியை அவர்கள் அடைந்தனர். கௌசல்யையும் சுமித்திரையும் அரசனை அணுகினர். ஆவி மறைந்தது எனத் தெரிந்துகொண்ட தும் கதறினார்கள். பூமியில் விழுந்துவிட்டனர். விஷயம் பலருக்கு எட்டிவிட்டது. கைகேயியும் ஏனையோரும் வந்து சேர்ந்தனர். அரசனது கைகளைப் பிடித்துக்கொண்டு யாவரும் அநாதைகள் போல் அலறினர்.

தசரதன் உயிர் நீத்தது, பெருந் தீ அணைந்ததுபோலும் ஜலம் வற்றின சமுத்திரம் போலும் ஒளி மழுங்கின சூரி யன் போலும் இருந்ததாம். கௌசல்யை கண்ணீர் மல்கிய கண்களுடன் சடலத்தின் தலையைத் தன் மடிமீது வைத் துக் கொண்டு கதறினாள். கைகேயியை வெகுவாகக் கண் டித்தாள்; "கணவனைக் கைவிட்டவளே, குலத்தையே

கெடுத்தவளே, பேராசை பிடித்தவன் ஒன்றையும் கருதா மல் விஷத்தைப் புசிப்பது போல், கூனியின் வார்த்தையைக் கேட்டு இராமனுக்கும் சீதைக்கும் கேடு செய்துவிட்டாய். ஜனக மன்னனுக்குத் தீங்கு புரிந்துவிட்டாய்'' என்றெல் லாம் சொன்னாள்.

பின்னர் அரண்மனை ஊழியர்களும் மந்திரிகளும் அவ்விடம் வந்தனர். 'அரசகுமாரர்கள் ஒருவருமிலர். அரசனுக்கோ ஈமக் கடன்கள் செய்தாக வேண்டும். அவர்கள் யாரேனும் வருமளவும் மன்னவன் சடலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானித்து அதைத் தைலத் தில் போட்டு வைத்தார்கள்.

அன்று அயோத்தியாபுரி துக்கத்தினால் தவித்தது. சந்திரனில்லா இரவு போலவும் கணவனில்லாக் காரிகை போலவும் காட்சி யளித்தது. பாமர மக்கள் யாவரும் கைகேயியைத் தூஷித்த வண்ணமாயிருந்தனர். இரவும் கழிந்தது. பொழுது புலர்ந்ததும் அரசனுடைய மந்திரி களும் புரோகிதர்களும் முனிவர்களும் ஆழ்ந்த யோசனையில் ஈடுபட்டனர். நாட்டில் ஒரு பெரிய சிக்கல் ஏற்பட்டுவிட் டது. வசிட்ட முனியை உடனே அழைத்தனர். எல்லோ ரும் மதி மயங்கிய வண்ணமாயிருந்தனர். கடந்தது ஒரே இரவுதான்; ஆனால் அது ஒரு நூறு வருட காலம் போல் தோன்றிற்றும்.

“இராம லட்சுமணர்கள் நாடு கடத்தப்பட்டனர். பரத சத்துருக்கனர்கள் நாட்டில் இல்லை. இது இப்படியே நீடித் திருந்தால் அராஜகம் ஏற்படும். அரசனில்லா நாடு நீர் வறண்ட நதி போலும், புல் பூண்டுகளில்லா வனம் போலும், மேய்ப்பவன் இல்லாப் பசு மந்தை போலும் இருக்கும். ரதத்தைக் காட்டுவது அதன் கொடி, நெருப்பைக் காட்டுவது புகை, அதே போல் ஜனங்களை உயர்வு படுத்து வது அரசன். தீய வழியில் செல்லாமல் நம்மையும் நம்

தேகத்தையும் கண் பார்வை காப்பது போல் அரசன் குடிகளைத் தீய வழியிலிருந்து காப்பாற்றுவான். அரசனே நமக்குத் தாய் தந்தை. நமக்கு நலன் செய்வதில் தேவர்களையும் மிஞ்சுபவன். சுருங்கச் சொல்லின் அரசனில்லா நாடு இருளடைந்த காடு. சமுத்திரம் கரையைத் தாண்டுவதில்லை. அதே போல் தசரத மன்னன் இருக்கும் போது உங்களைத் தொந்தரவு செய்யவில்லை. இப்பொழுது நாடு காடாகிவிட்டது. இச்சிக்கலைத் தீர்க்க நீங்கள்தான் முன் வரவேண்டும்'' என்று வேண்டினர்.

இராமாயணத்தில் வரும் முனிவர்கள் தவமுடையோர்கள் மட்டும் அல்ல. பெரிய ராஜதந்திரிகள். எந்த சந்தர்ப்பத்தையும் சமாளிக்கும் சக்தியுடையவர்கள். வசிட்ட முனியும் சளைக்கவில்லை. குறிப்பிட்ட பணியை ஏற்றுக் கொண்டார். தீரரான நான்கு பேர்களைப் பொறுக்கி உடனே ராஜகிரகம் என்னும் இடத்திற்குச் சென்று பரத சத்துருக்கனரைக் கையோடு அழைத்து வரும்படி கூறினர். பரதனுக்குத் தன் தகப்பன் தமையன் மீது உள்ள அன்பும் தன் தாய்மீது உள்ள வெறுப்பும் வசிட்டருக்கு நன்கு தெரியும். நடந்த விஷயங்களை அப்படியே சொல்லி விட்டால் பரதன் பெருந் துயரமடைவான். உயிரையும் மாய்த்துக்கொள்வான். ஆகையால் தூதர்கள் அவனிடம் ஒன்றும் சொல்லக் கூடாது. "அயோத்தியில் ஒரு முக்கியமான காரியம்; நீ உடனே சத்ருக்கனனோடு வரவேண்டும்'' என்று மட்டும் சொல்ல வேண்டியது. மேலும் பட்டு வஸ்திரங்களையும் ஆபரணங்களையும் எடுத்துச் செல்ல வேண்டும். துக்கக் குறி ஒன்றும் காட்டக் கூடாது என்று திட்டமிட்டார். அவர்களும் உடனே புறப்பட்டு மலைகள், காடுகள் எல்லாவற்றையும் தாண்டி ராஜகிரகத்திற்கு வந்து சேர்ந்தனர்.

தூதர்கள் வந்த அந்த இரவில் பரதன் நித்திரையில் ஈடுபட்டிருந்தான். விடியற்காலம் ஒரு பிரியமற்ற கனவு கண்டான். அதன் மூலம் மிக்க மனச் சோர்வு அடைந்தான். அவன் சிநேகிதர்களுக்கு மிகவும் கவலை ஏற்பட்டது. அவனைக் களிப்புறச் செய்ய அவர்கள் மிகவும் சிரமப் பட்டனர். ஆனால் பரதனின் மனம் அவைகளில் ஈடுபடவில்லை. தன் கஷ்டத்தை அவர்களிடம் சொன்னான்: "என் பிதாவிற்கு ஏதோ கேடு சம்பவித்திருக்கிறது; அரசன் மிகவும் கேவலமான நிலையில் காட்சி அளித்தார். ஆகா என்ன கோலம்! வெளுத்து மெலிந்து தலைமயிர்கள் துண்டிக்கப்பட்டு, ஒரு பெரிய மலைச் சிகரத்திலிருந்து பசுவின் சாணக் குழியில் மன்னன் விழுவதைக் கண்டேன். அதனுள் அவர் விளையாடிக் கொண்டும் சந்தோஷப்பட்டுக்கொண்டுமிருந்தார். அங்கமெல்லாம் எண்ணெய்யைத் தடவிக்கொண்டு, எள் அன்னத்தைப் புசித்துக் கொண்டு மிருந்தார். அதுமட்டுமா? சமுத்திரம் வற்றிக் கிடந்தது. சந்திரன் பூமியில் விழுந்து விட்டான். பூமியில் எங்கும் இருள் படர்ந்தது. மலைகள் நெருப்பைக் கக்கின. மன்னன் கறுப்பு உடை அணிந்துகொண்டு, கறுப்பு அணையின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தார். இரத்தவர்ணமுள்ள சந்தனத்தை உடம்பில் பூசிக்கொண்டிருந்தார். சில ஸ்திரீகள் அவரைப் பரிகசித்துக்கொண்டும் துன்புறுத்திக் கொண்டும் இருந்தனர். இறுதியில் தசரத மன்னன் கழுதைகள் பூட்டின ரதத்தில் ஏறிக்கொண்டு தென் திசை நோக்கி விரைந்து சென்றார். இந்த பயங்கரக் கனவைக் கண்டு நான் அஞ்சுகிறேன். ஒன்று மட்டும் நிச்சயம். வருங்காலத்தில் எனக்கோ அல்லது இராம லட்சுமணருக்கோ இல்லாவிடில் அரசனுக்கோ கேடு சம்பவிக்கவிருக்கிறது. மரணமும் ஏற்படலாம். 'கழுதை பூட்டிய ரதத்தில் ஏறுகிறவன் வெகு சீக்கிரம் மயானப் புகையில்

மறைவான்' என்பார்கள் நினைக்க நினைக்க எனக்கு மிகவும் பயமாக விருக்கிறது. என் ஜீவனும் போய்க் கொண்டிருப்பது போலிருக்கிறது. காரணம் தெரியவில்லை. அரசனைப் பற்றி மிகவும் கவலையாகவும் அச்சமாகவும் இருக்கிறது. என்ன செய்வேன் என்ருன்.

இவ்விதமாக பரதன் தன் சகாக்களுடன் பிரலாபித்துக்கொண்டிருக்கையில் அயோத்தியிலிருந்து தூதர்கள் அவ்விடம் வந்து சேர்ந்தனர். பரதனுக்குப் பணிவிடை செய்தனர். அவனது மாமன் பாட்டனுருக்கு 30 கோடி ரூபாய் பெறுமான ஆடையாபரணங்கள் வழங்கினர். "அயோத்தியில் ஒரு முக்கிய கார்ரியம், தாங்கள் உடனே புறப்பட்டு வரவேண்டியது" என்று அவனிடம் விண்ணப்பித்தார்கள்.

பரதனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்களைச் சில கேள்விகள் கேட்டான்:– "தூதர்களே! எனது பிதா சௌக்கியமாக இருக்கிருரா? மகாத்மாக்களான எனது சகோதரர்கள் இராம லட்சுமணர் சுகமாக இருக்கின்ருர்களா? தர்மத்தையே நாடி தர்மத்தையே நம்பி வாழும் இராமனின் தாய் கௌசல்யா தேவியும், அறத்தை அணிகலமாகக் கொண்ட சுமித்திரா தேவியும் சௌக்கியமா?" என்று கேட்டான். அயோத்தியில் இதுகாறும் நடந்தது எள்ளளவும் பரதனுக்குத் தெரியாது. எனினும் இவ்வுத்தமனுக்குத் தன் தாயைப் பற்றி பீதி உண்டு. உலகம் அறியும் முன்னே அவன் அவள் சுபாவத்தை நன்கறிந்தவன். "சுயநலமிகுந்தவளும்,சதா கோபமுள்ளவளும் பிடிவாதக் காரியும், தான் மிகவும் அறிவுள்ளவள் என்ற கர்வமுள்ளவளுமான என் தாய் சௌக்கியமா?என்ன சொல்லியனுப்பினுள்?" என்று அவர்களைக் கேட்டான்.

தூதர்களுக்கு என்ன பதிலுரைப்பது என்று தெரிய வில்லை. ரத்தினச் சுருக்கமாகச் சில வார்த்தைகளே சொன்னார்கள். "எல்லாம் சௌக்கியந்தான். தாமரை மீதுள்ள லட்சுமி தேவி உம்மைத் தேடி வருகிறாள். உடனே புறப்பட ஏற்பாடு செய்யுங்கள்" என்றனர்.

பரதனும் தனது உறவினர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு பிரயாணத்தைத் தொடங்கினான். அவர்கள் இவனுக்கு ஏராளமான வெகுமதிகள் ஆபரணங்கள், குதிரைகள், யானைகள் இவைகளைக் கொடுத்தனர். ஆனால் இவைகளை அவன் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை; கெட்ட கனவின் ஞாபகமே அவனை வாட்டிற்று. சத்துருக்கனுடன் கிளம்பி விட்டான்.

பிரயாணம் வெகு துரிதமாக நடந்தது. எனினும் ஏழு இரவுகளுக்குப் பின்தான் அயோத்தியாபுரி வந்து சேர முடிந்தது. தூரத்திலிருந்து பார்த்த பரதனுக்கு நகரம் ஒரு புதுவித தோற்றம் அளித்தது. எங்கும் சோகக் குறிகளே தென்பட்டன. நிசப்தம் நிலவியது. ஜனங்கள் நடமாட்டம் இல்லை. பூங்காக்களும், யுவ, யுவதிகள் கேளிக்கை இடங்களும் காலியாக இருந்தன. மிருகங்களும் பறவைகளும் உயிரற்றவை போலிருந்தன. ஏன், காற்றும் வீசவில்லை. வழக்கம்போல் சங்கீத நாதம், வேதமோதும் குரல்கள் கேட்கவில்லை. இவைகளைப் பார்த்ததும் பரதனுக்குத் தன்னை வெகு சீக்கிரமாக வரவழைத்ததையும் நினைத்ததில் ஒரு விஷயம் புலனாயிற்று. ஏதோ அரசனுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று தெரிந்துகொண்டான். மிகவும் மனக் கஷ்டத்துடன் தன் தகப்பனின் அரண்மனைக்குச் சென்றான். ஆனால் அங்கு தந்தையைக் காணவில்லை. பின்னர் அவர் எப்பொழுதும் சல்லாபித்துக் கொண்டிருக்கும் தன் தாயின் இல்லத்திற்குச் சென்றான்.

அங்கே மங்கலக் குறிகள் காணப்படவில்லை. ஒரு பொன் னுசனத்தில் அவன் தாய் மட்டும் வீற்றிருந்தாள். அவனைக் கண்டதும் எழுந்திருந்து சந்தோஷமடைந்தாள். முதலில் தன் இனத்தினர் சௌக்கியத்தைப்பற்றி விசாரித்தாள். பரதனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் கேள்விகளுக்கு ஒருவாறு பதில் அளித்துவிட்டு, "என் பிதா எங்கே? உன் அறையில் இருப்பாரே அவரை நான் பார்த்தாக வேண்டும்" என்று கேட்டான். கைகேயி மன நிம்மதியை இழக்கவில்லை. "உன் பிதா பெரிய மகாத்மா, தேஜசுடைய வர். நற்காரியங்களிலேயே ஈடுபடுபவர், எவரையும் காக்க வல்லவர். எனினும் அவர் எல்லாப் பிராணிகளும் முடிவில் அடையும் கதியை அடைந்துவிட்டார்"என்ருள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் பரதன், துக்கம் தாங்காமல், "ஆ! நான் கெட்டேன்" என்று கதறினன். காட்டினிலே கோடரியினல் வீழ்த்தப்பட்ட மரம் போல் தரையில் விழுந்துவிட்டான். கைகேயி அவனைச் சமா தானம் செய்ய முயன்ருள். "உன் போன்றவர்கள் துக் கத்திற்கு வசமாகக் கூடாது" என்று சொன்னுள். பரதன் இவற்ருல் ஆறுதல் அடையவில்லை. மீண்டும் கதறினன்.

அரசன் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைப் பார்; பிறகு யாகம் செய்வார் என்று எண்ணி சந்தோஷத் துடன் ஊருக்குப் புறப்பட்டுப் போனேன். ஆனல் யாவும் நேர் விரோதமாக ஆய்விட்டனவே. என்னைக் கண்டால் களிப்படைவாரே! கொஞ்சி விளையாடுவாரே! அவர் போய்விட்டாரே! எனதருமைச் சகோதரன், தந்தைக்குச் சமானமானவனுகிய இராமன் எங்கே? அவன் பாதங்களை நான் உடனே வணங்கவேண்டும். இருக்கட்டும். எனது தந்தை ஆவி போகுமுன் என்னென்ன செய்தார்? என்ன வெல்லாம் சொன்னர். நான் கேட்கவேண்டும்" என்ருன்

கைகேயி, நடந்தவை யாவையும் ஒளிவுமறைவு இல்லாமல் சொன்னாள். பரதனுக்கு ஒரு விஷயம் புரியவில்லை. இராமனை ஏன் காட்டுக்கு அனுப்பினார்? இராமனிடமும் சந்தேகம் ஏற்பட்டது. உடனே கைகேயியைப் பார்த்து, "இராமன் காட்டுக்குப் போகும்படி என்ன குற்றம் செய்தான்? அந்தணர் சொத்தை அபகரித்தானா? குற்றமற்றவர்களை இம்சித்தானா? பரதாரத்தை விரும்பினானா?" என்று பரதன் கேட்டான்.

கைகேயி இம் மூவகைக் குற்றங்களையும் இராமன் செய்யவில்லை; செய்வதற்கும் அவன் மனம் ஒருபோதும் நாடாது என்று உறுதி கூறிப் பின்னர் தான் வரங்கள் பெற்றதையும் அரசனை நிர்ப்பந்தம் செய்ததையும் விவரித்து எப்படியாவது அரசை ஏற்றுக்கொண்டு அரசனுக்கு ஈமச் சடங்குகள் செய்யும்படி சொன்னாள்.

பரதனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஒரே நொடியில் இருவரை இழக்கும்படி செய்துவிட்டாள் அவன் தாய். துக்கத்திற்கு மேல் துக்கம். புண்ணின் மேல் காரம் இட்டுவது போலிருந்தது, அரசன் மரணமும் இராமன் தவசியானதும். தாயை வெகுவாக ஏசினான்.

"பாவி!என் தந்தையைக் கொன்றுவிட்டு,என் தமையனையும் கெடுத்துவிட்டாயே. உன்னை ஏன் என் பிதா மணந்துகொண்டார்? நெருப்பை அணைவது போலல்லவா ஆயிற்று அவரது கதி? எங்கள் குலத்தையும் நாசம் செய்து விட்டனையே. இராமன் உன்னைத் தாய்க்கு மேலாகக்கருதினான். கௌசல்யா தேவி உன்னைச் சகோதரி போல் பாவித்து வந்தாள். இவர்களுக்குக் கொடிய தீமை செய்து விட்டாயே, இராமன் மீது நான் வைத்திருக்கும் பாசம் உனக்கு தெரியாது போலும். இல்லாவிடில், நீ இப்படிச் செய்யத் துணிவாயோ? இராம லட்சுமணர் இன்றி நான் ராஜ்யபாரத்தை

எப்படி வகிக்க முடியும்? பெரும் மாடு தாங்க வேண்டிய பாரத்தை ஒரு இளங் கன்றிடம் ஒப்படைப்பதா? எங்கள் வம்சம் இக்ஷ்வாகு வம்சம். தர்மத்திற்கும், நீதிக்கும் பேர் போனது. சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் போற்றப்பட்டது. அதை ஒரு நொடியில் நாசம் செய்து விட்டனையே. உன் கொடிய செயல் என் உயிரையும் வதைக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நான் ஒரு நாளும் உன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யப் போவதில்லை. அரசைத் துறந்து, காட்டுக்குப் போய் அண்ணனை அழைத்து வருவேன்'' என்று சொன்னான். துக்கம் தாங்க முடியவில்லை. குகையில் அகப்பட்ட சிங்கம்போல் கர்ஜித்தான்; கதறினான்.

''உன்னை ராஜ்யத்தை விட்டுத் துரத்த வேண்டும். நீ என்னையும் இழந்து எனக்காகவும் அழுது புலம்ப வேண்டும். குலத்தைக் கெடுக்க வந்தவள், கொலைக் குற்றம் செய்தவளாய் விட்டாய். மேல் உலகத்திலும் என் தந்தையுடன் இருக்கமுடியாது. நரகவாசமே உன் கதி. உன் தகப்பன் அசுவபதியின் குலத்திற்கே அவகேடு செய்துவிட்டாய். அவர் குலத்திலே அரக்கியாய்த் தோன்றிவிட்டாய், என்னையும் உலகெல்லாம் வெறுக்கும்படி செய்துவிட்டாய். மேலும் ஒரு விஷயம். கௌசல்யா தேவிக்கு இராமன் ஒருவனே கதி. ஒரு புத்திரன் தாயின் ஒவ்வொரு அவயவத்தினின்றும் இருதயத்தினின்றும் உற்பவித்தவன். இது உலகமறிந்த விஷயம். முன்னாள் காமதேனு எனும் தெய்வப்பசு கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்தது. அவ்வமயம் இந்திரன் அதைப் பார்த்தான். பயந்து அஞ்சலி செய்தான். காரணம் கேட்டான். 'பூமியில் இரு எருதுகளை ஓர் உழவன் ஏரில் கட்டி நடுப்பகலில் உழுகிறான். சூரியவெப்பம் தாங்காமல் மாடுகள் தவிப்பதை யான் பார்த்தேன். அவை என் குழந்தைகள் ஆனபடியால் எனக்குத் துக்கம் உண்டாயிற்று

என்று சொல்லிற்று. காமதேனுவுக்கு லட்சக் கணக்கில் குழந்தைகள் உண்டு. எனினும் இந்த இரண்டு மாடுகளின் கஷ்டத்தை அதனால் தாங்கமுடியவில்லை. பரமசாதுவும், ஒரே மகனை உடையவளுமான கௌசல்யா தேவிக்கு இராமன் வனம் சென்றது எவ்வளவு கஷ்டத்தை உண்டு பண்ணியிருக்கும் என்பதை நீ யோசித்தனையா?" என்றான் பரதன்.

இறுதியாக பரதன் கைகேயியைப் பார்த்துச் சொன்னான்: "உன்னால் எனக்குப்பாவமூட்டை ஏற்பட்டுவிட்டது. அதை எப்படியாவது நீக்க வேண்டும். நானே உடனே வனம் போய் என் தமையனை அழைத்துவரப் போகிறேன். நீ உயிருடனிருப்பதை நான் விரும்பவில்லை. தீயில் குதித்து உயிரைவிடு; அல்லது வனத்திற்குச் சென்றுவிடு; அல்லது கழுத்தில் கயிற்றைச் சுருக்கிக்கொள். வேறு வழியில்லை. இராமன் திரும்பி வந்து அரசு செலுத்தும் வரை எனக்கு மன நிம்மதி கிடையாது."

என்ன பேசியும் பரதனுக்குத் துக்கம் தணியவில்லை. மேலும் மேலும் அவனைத் தாக்கிற்று. வனத்தில் அங்குசத்தினால் குத்தப்பட்ட யானை போல் தவித்தான். சினங்கொண்ட சர்ப்பம்போல் பெருமூச்சுவிட்டுக் கொண்டு, சிவந்த கண்களுடன், ஆடை ஆபரணங்கள் நழுவினபடியே பூமியில் விழுந்து விட்டான்.

சிறிது நேரம் கழித்து மந்திரிகள் அவனைக் காண வந்தனர். அவர்களைக் கண்டு மேலும் துக்கமடைந்தான். அவர்களைப் பார்த்து: "யான் அரசை ஒருபோதும் விரும்பியதில்லை. என் தாயுடன் அதை அடைவதற்காகச் சதிசெய்யவில்லை. நான் அந்தச் சமயம் சத்துருக்கனோடு தூரதேசத்திலிருந்தேன். எதற்காக இராம லட்சுமணரும், சீதாதேவியும் வனத்திற்கு அனுப்பப்பட்டார்கள் என்பதும் எனக்குத் தெரியாது" என்று சொல்லிக் கதறினான்.

அவன் குரல் கேட்ட கௌசல்யா தேவி அவனை அணுகினாள். பரதன் அவளுக்கு அஞ்சலி செய்தான். பெரும் துக்கத்தினால் மனது கலங்கியவள் நிதானம் தெரியவில்லை. பரதனைப் பார்த்து கடும் சொற்களை வீசினாள். "உனது இஷ்டம் போல் அரசும் கிடைத்து விட்டது. உன் தாயார் உனக்குச் சீக்கிரமாகவே சம்பாதித்து கொடுத்து விட்டாள். என்னால் இராமனை விட்டு வாழமுடியாது. என்னையும் காட்டிற்கு அனுப்பிவிடு" என்றாள்.

இக்குரூரமான வார்த்தைகள் பரதனைப் பெரிதும் பாதித்தன. புண்ணை ஊசியால் குத்துவது போலிருந்தது. கௌசல்யையை வணங்கி, மீண்டும் சொன்னான்:—"உத்தம குலத்தவரே! ஏன் என்னை இப்படி நிந்தனை செய்கிறீர்கள். இராமன் மீது எனக்குள்ள உள்ளன்பு உங்களுக்குத் தெரியாத விஷயமா? நான் இராமனைக் காட்டுக்கு அனுப்பவோ அனுப்புவதற்கு உடந்தையாகவோ இருந்தால், பெரும் பாவம் செய்தவனாவேன். தூங்குகிற பசுவைக் காலால் உதைப்பவன், பெரிய வேலையைச் செய்து முடித்தபின் வேலைக்காரர்களுக்குக் கூலி கொடுக்காமல் மோசம் செய்பவன், மன்னுயிரைத் தன்னுயிர் போல் கருதும் மன்னவனுக்குத் துரோகம் செய்பவன், குடிகளிடமிருந்து ஆறில் ஒரு பாகம் வரியாக வாங்கிக்கொண்டு, அவர்களைக் காப்பாற்றாத அரசன், வேள்வி செய்வோருக்கு உரிய சன்மானம் கொடுக்காதவன், யுத்தகளத்தில் புறங்காட்டி ஓடுபவன், பாயசம் முதலிய ருசியான பண்டங்களைப் பிறருக்குக் கொடுக்காமல் புசிப்பவன், தன் குருவை நிந்திப்பவன், பசுவைக் காலால் உதைப்பவன், சிநேகிதர்களுக்குத் துரோகம் விளைவிப்பவன், ரகசியத்தை வெளியிடுபவன், பிறருக்குத் தீங்கு செய்பவன், செய்நன்றி மறப்பவன் உலகத்தையே வெறுப்பவன், தன் மனைவி, பிள்ளைகள் ஊழியர்கள் இவர்களுக்குக் கொடுக்காமல் தான் ஒருவனே

உண்பவன், தன் மனைவி, புத்திரர்களை வெறுப்பவன், அரசன், ஸ்திரீகள், குழந்தைகள், கிழவர்கள் இவர்களைக் கொல்பவன், மது, மாமிசம், லோகங்கள், விஷப்பொருள்கள் இவைகளை விற்பவன் இவர்கள் ஒவ்வொருவரும் செய்யும் பாவங்கள் இராமனைக் காட்டிற்குத் துரத்துவதால் ஏற்படும் பாவத்திற்குச் சமமாகும்.

பெற்றோர்களை அவமதித்தவன், வீட்டில் நெருப்பு வைத்தவன், பிச்சைக்காரர்களிடம் கருணை காட்டாதவன், தன் மனைவியைப் புறக்கணித்து விட்டுப் பிறர் மனைவியை இச்சிப்பவன், குடி தண்ணீரைக் கெடுப்பவன், விஷத்தைக் கொடுப்பவன், அந்தணர்கள் செய்யும் பூசனையைக் கெடுப்பவன், இளங்கன்றுடைய பசுவைப் பூராவும் கறந்துவிடுபவன், தாகமுடையோருக்குத் தண்ணீர் கொடாதவன், இவர்கள் கதியே எனக்கும் கிட்டும்'' என்று சொல்லி, கீழே விழுந்து விட்டான்.

கௌசல்யை பயந்து விட்டாள். பரதனுக்குத் தான் பெரிய அபசாரம் செய்துவிட்டோம் எனத் தெரியவந்தது. அவனைப் பார்த்து, "குழந்தாய்! நீ சத்தியத்தினின்றும், பிறழாதவன். உனக்கு மேலான லோகங்கள் கிடைக்கும்'' என்றாள். இருவரும் அழுத வண்ணம் இருந்தனர். இரவும் கழிந்தது.

மறுநாள் காலை வசிட்ட முனிவர் பரதனை அணுகினார். "நீ துக்கப்படுவது நன்றன்று. அரசனுக்கு ஈமக்கடன் செய்ய வேண்டும். எழுந்திரு'' என்றார். பரதனும் உடனே அக்காரியங்களை ஆரம்பித்தான். அரசனது சடலம் எண்ணெய்க் கொப்பறையிலிருந்து எடுக்கப்பட்டது. முகம் மட்டும் நிறம் மாறியிருந்தது. ஆனால் ஏதோ தூங்குவது போல் காணப்பட்டது. பரதனுக்குப் பார்க்கச் சகிக்கவில்லை. வசிட்ட முனி துரிதப்படுத்தி, உணர்ச்சி வசமாகாமல்

இருக்கும்படி சொன்னார். சடங்குகளை விதி வழுவாமல் ஒருவாறு செய்து முடித்தான்.

பத்து நாட்கள் சென்றன. பரதனுக்குத் துக்கம் தணிந்த பாடில்லை. தசரதமன்னன் வெகு விருத்தாப்பிய வயதில் தான் இறந்தார். மேலும் அவருக்கு இராமனிடம் தான் பாசம் அதிகமென்பது பிரசித்தி. எனினும் மற்ற குமாரர்களிடம் அவருக்கு இருந்த பிரேமையும், அவர்கள் தன் தகப்பன் மீது வைத்த அன்பும், பரதன் படும் துயரத்திலிருந்து ஒருவாறு ஊகிக்க முடிந்தது. நாட்கள் செல்லச் செல்ல உலக இயல்புக்குமாறாக பரத சத்துருக்கனருக்கு துக்கம் அதிகரித்ததே ஒழிய குறையவில்லை. ஈமச்சடங்குகள் நடந்த பதின்மூன்றாவது நாள் எலும்புக் கூடாரத்தைப் பிரித்து நீரில் கலக்கவேண்டிய சடங்கு வந்தது. பரதன் எலும்புகளைப் பார்த்தவுடன் கீழே விழுந்து மன்னவனின் மாண்டைச் சொல்லிச் சொல்லி அழுதான். வசிட்டர் அப்பொழுது அங்கு வந்து பரதனைக் கண்டு மேற்கொண்டு நடக்கவேண்டிய காரியங்களைப் பற்றிப் பிரஸ்தாபித்தார்; அவனையும் சமாதானப்படுத்தினார் சத்துருக்கனை சுமந்திரன் சமாதானம் செய்தான். சடங்குகள் ஒருவாறு முடிந்தன. பிறகு சத்துருக்கன் பரதனிடம் இராமனிருக்கும் வனத்திற்குப் போவதைப் பற்றிப் பிரஸ்தாபித்தான். நடந்ததைப் பற்றிச் சிந்தித்தான். "கேவலம் ஒரு ஸ்திரீயால் விளைந்த கேட்டைப் பார். மகா பராக்கிரமசாலியான இராமனே வனம்போகும்படி ஆய்விட்டது. நமது பிதாவையும் தர்மத்தை விடும்படி செய்துவிட்டது மகாபராக்கிரமசாலியான லட்சுமணனாலும் இவைகளைத் தடுக்க முடியவில்லை" என்றான். (இராமாயணத்தில் சத்துருக்கன் பேசுவது இப்பொழுதுதான். பிற்பாடு உத்திர காண்டத்தில் லவணாசுரயுத்தத்தின் போதுதான்) அவ்வமயம் சகல ஆபரணங்களையும் பூண்டு, கூனிமந்தரை

அவ்விடம் வந்தாள். பலவித மணிகளையும் நகைகளையும் அணிந்திருந்தாள். கயிற்றினால் கட்டப்பட்ட பெண் குரங்குபோல் இருந்தாள். பரதன் அவளை இழுத்து சத்துருக்கனிடம் விட்டான். "இராமன் காட்டுக்குச் சென்றதும் நம் தந்தை மரண மடைந்ததும் இவளால் தான். இவளை உன் விருப்பம் போல் சிட்சை செய்" என்றான். சத்துருக்கன் அவளை நையப்புடைத்தான். அவள் கூக்குரலிட்டாள். அவளுடன் இருந்த சிநேகிதர்கள் ஓட்டம் பிடித்தனர். தமக்கும் ஆபத்து ஏற்படும் என்று அஞ்சினர். எல்லோரும், அன்பு, இரக்கம், தர்மம் உடைய கௌசல்யா தேவியிடம் சென்று சரண் அடைவதெனத் தீர்மானித்தனர். சத்துருக்கன் கூனியை விடவில்லை. கைகேயியையும் கடிந்து பேசினான். அவளும் திகிலடைந்து விட்டாள். தன் மகனிடம் சென்றாள். பரதன் சத்துருக்கனை அணுகி, "பெண்களைக் கொல்லாதே. விட்டுவிடு. நானே இக்கைகேயியைக் கொலை செய்து விடுவேன். ஆனால் என்னை இராமன் கோபிப்பானே என்று அஞ்சுகிறேன். கூனியைக் கொன்றோமானால் உன்னுடனும் என்னுடனும் இராமன் பேசமாட்டான்" என்றான். கூனி விடுவிக்கப்பட்டாள். கைகேயியிடம் சரண் புகுந்தாள்.

பதினாலாவது தினம் ஈமச் சடங்குகள் அனைத்தும் முடிந்தன. ராஜாங்க அதிகாரிகள் பரதனை அணுகி அரசை ஏற்கும்படி வேண்டினர். நாடு நாயகனற்று இருக்கக் கூடாது; அபிஷேகத்திற்குள்ள சாமான்கள் அப்படியே இருக்கின்றன என்றனர். பரதனோ சிறிதும் சம்மதிக்கவில்லை. அபிஷேக சாமான்கள் யாவையும் பார்த்து வலம் வந்துதன் அபிப்பிராயத்தையும் வெளியிட்டான்—"எங்கள் குலத்திலே மூத்தவனுக்கே அரசு ஏற்படவேண்டும். இதற்கு மாறாக நீங்கள் என்னை வற்புறுத்தக் கூடாது. நான் பதினான்கு வருஷங்களும் வனத்திலேயே சஞ்சரிப்பேன். இராமன்தான்

அரசு செலுத்தவேண்டும். இந்த சாமான்களை நான் எடுத்துக் கொண்டுபோய் இராமனிடம் சமர்ப்பித்து அவனுக்கே பட்டாபிஷேகம் செய்யப்போகிறேன். அங்கிருந்து அவனை இவ்விடம் அழைத்து வருவேன். எது எப்படியாயினும் நான் என் தாயின் விருப்பத்தை நிறைவேற்றப் போவதில்லை. இராமன் தான் அரசு புரிவான். நான் அவனிடம் செல்வேன். வேலையாட்களைக்கொண்டு காட்டிற்குப்போகும் வழியைச் சீர்படுத்தச் சொல்லுங்கள்'' என்றான்.

அங்கு கூடியவர்களுக்கு இவ்வார்த்தைகள் மிகவும் சந்தோஷத்தை அளித்தன. வரவேற்றனர். காட்டுப் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் துரிதமாகச் செய்யப்பட்டன. வெகு சீக்கிரத்தில் யாவும் முடிந்தன. நடைபாதை வெகு நேர்த்தியாக அமைந்துவிட்டது. ஆங்காங்கு பாலங்கள் கட்டப்பட்டன, கூடாரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. நாடாகி விட்டது.

பொழுது புலர்ந்ததும் பரதன் எழுந்திருந்தான். ஒரு சிறிய விஷயம். ஆனால் அது அவ்வுத்தமனைக் திடுக்கிடச் செய்தது. காலையில் அவன் எழுந்திருப்பதற்குமுன் அரண்மனை சிப்பந்திகள் வழக்கம் போல், சங்கம் பேரிகையையும் இதர வாத்தியங்களையும் முழக்கச் செய்தனர். அவைகளின் ஒலி அன்று கொஞ்சம் மிகையாகவே இருந்தது. பரதனுக்கு இவை துக்கத்தையே விளைவித்தன. சத்துருக்கனைக் கூப்பிட்டான். "பார் இந்த அநியாயத்தை. கைகேயினால் இதர ஜனங்களும் பெரும் தவறு செய்கிறார்கள். நான் அரசனல்லன். தர்மிஷ்டரும், மகாத்மாவுமான அரசர் என் தலையில் இந்த பெரிய பாரத்தை வைத்துவிட்டார். படகோட்டியில்லாமல் படகு ஜலத்தில் தத்தளிப்பதுபோல் அல்லவா இருக்கிறது?'' என்று சொல்லி மீண்டும் புலம்பினான். அங்கிருந்தோர் யாவரும் இதைக் கேட்டு அழவாரம்பித்தனர். பின்னர் வசிட்டமுனிவர் ஊரில் உள்ள பிரமுகர்களையும்,

அரசர்களையும் சபாமண்டபத்திற்கு வரும்படி அழைக்கச் சொன்னார். அவ்வண்ணமே யாவரும் வந்தனர். ஒரு பெரிய சபை அரண்மனை சபாமண்டபத்தில் கூட்டப்பட்டது. பர் தனும் அவ்விடம் பிரசன்னமானான். தேவசபையில் இந்தி ரன் பிரவேசித்தது போல் இருந்தது அவன் வருகை. சில ருக்கு அவனது முகச்சாயல் தசரத மன்னனை நினைப் பூட்டியது.

வசிட்டமுனிவர்தான் முதலில் பேச ஆரம்பித்தார். "சகலவித போகங்கள் நிரம்பியுள்ள இந்த ராஜ்யத்தை-தகப்பனால் அளிக்கப்பட்ட அரசை - பரதன் தான் பரிபா லனம் செய்ய வேண்டும். மேலும் நாட்டினிலுள் ளோர் யாவரும் அவனையே இச்சிக்கிறார்கள்" என்று சொன்னார்.

இவ்வார்த்தைகள் பரதனுக்கு வருத்தத்தையே கொடுத் தன. இராமனை மனதிலே நினைத்து அழுது கொண்டு மெல்ல மெல்ல சபையோர்கள் யாவருக்கும் கேட்கும் படி ஒரு சிறிய பிரசங்கமே செய்துவிட்டான்.

"சகல வித தர்மங்களை அனுஷ்டித்தவரும் நன்னெறி தவறாத வருமான எனது தகப்பனாரின் ராஜ்யத்தை நான் இராமனைப் புறக்கணித்து விட்டு, எப்படி ஏற்கமுடியும்? நீங்கள் நீதி நெறியைக் கைப்பற்ற வேண்டும். எங்களில் இராமனே முதலில் பிறந்தவன். எங்கள் முன்னோர்களில் மிகவும் பிரக்யாதியடைந்த திலீபன், நகுஷன், ககுஸ்தன் முதலியோருக்குச் சமமாக அவன் ஒருவனே இருப்பவன். அவனே அரசுக்குரியவன். அவனைத் தள்ளிவிட்டு, யான் பட்டமேறுவது அரசர்களுடைய பண்புக்கு விரோதம். மேல் உலகத்தினரும் வெறுக்கத்தக்க செய்கை. பெரும் பாபச் செயல். இக்ஷ்வாகு வம்சத்தினருக்குத் தீராப்பழி யைக் கொடுக்க வல்லது. என் தாயின் பாபச் செயலுக்கு

நான் ஒரு பொழுதும் இணங்கமாட்டேன். காட்டினில் இருக்கும் இராமனே அரசாளவேண்டும். இந்தராஜ்யம் மட்டுமல்ல, மூன்று உலகங்களையும் காக்க அவனுக்கு வலிமை உண்டு" என்றான்.

தர்மமாயும் நியாயமாயுமுள்ள இவ் வார்த்தைகள் சபையோரை களிப்புறச்செய்தன. மீண்டும் அவன் சொன்னான் "வனத்திற்கு யான் போய், இராமனை இங்கு கொணர்வேன். அப்படி அவன் வர இணங்காவிடில் நானும் லட்சுமணன்போல் அவ்விடமே இருக்கப் போகிறேன். ஏற்கெனவே காட்டிற்கு பாதை ஏற்படுத்த ஏற்பாடு செய்து விட்டேன்" பிறகு சுமந்திரனை அழைத்து, வெகு சீக்கிரம் பிரயாணத்தைத் துவக்கும்படி சொன்னான்.

சுமந்திரனுக்கும் நாட்டினிலுள்ளோர் யாவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. காட்டிற்குச் செல்ல எல்லோரும் ஆயத்தமாயினர். ஒரு பெரும் சேனை திரட்டப்பட்டது. சேனாதிபதிகள் வெகு உற்சாகமாக இருந்தனர். அவர்களது மனைவிமார்கள் இராமனை வெகு துரிதமாகக் கொண்டு வருமாறு கட்டளையிட்டனராம். ஆறாயிரம் தேர் வீரர்கள் ஆயுதபாணிகளாக பரதன்பின் சென்றனர். பத்து லக்ஷம் குதிரை வீரர்கள் அவர்கள் பின் தொடர்ந்தனர். பொதுஜனங்கள் வெகு குதூகலத்துடன் ஆரவாரம் செய்துகொண்டு புறப்பட்டனர். இராமனை அழைத்துவரச் செல்கிறோம் என்ற நினைப்பினால் மிகவும் மகிழ்ச்சியடைந்து கைகேயி, சுமத்திரை, கௌசல்யைமுதலியோர் ரதமேறிச்சென்றனர். பரதன் செய்த ஆக்ரோஷத்தினால் கைகேயியின் மனம் முற்றிலும் மாறி, காட்டுக்குச் செல்வோரில் முதலாவதாக அவள் சென்றதை கவி குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது.

# நால்வர் மகாநாடு

---

ஜூன் மாதம் பதினெட்டாம் தேதி, ஜினிவாவில் நால்வர் மகாநாடு நடைபெற்றது. அமெரிக்க ஜனாதிபதி ஐஸன் ஹவர், பிரிட்டிஷ் பிரதம மந்திரி அந்தோணி ஈடன், பிரெஞ்சுப் பிரதம மந்திரி பாவ்ரே, ருஷ்யப் பிரதம மந்திரி மார்ஷல் புல்கானின் ஆகிய நால்வரும் மகாநாடு கூடினர். இந்த நான்கு தேசங்களின் வெளிநாட்டு விவகார மந்திரிகளும் இம்மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஜினிவாவுக்குப் புறப்படுமுன், ருஷ்யப் பிரதம மந்திரி மார்ஷல் புல்கானின், மாஸ்கோ நகரில் கிரெம்ளின் மாளிகையில் முதன் முறையாகப் பத்திரிகை நிருபர்கள் கூட்டம் ஒன்றைக் கூட்டினுர்.

"சிக்கலான சர்வதேசப் பிரச்னைகள் அனைத்துக்கும், நால்வர் மகாநாட்டில் பரிகாரம் தேட முடியும் என்று எதிர் பார்ப்பது தவறு. ஆயினும் எல்லாத் தரப்பாரும் நல்லெண்ணத்துடனும் அந்தரங்கசுத்தியுடனும், உடன்பாடு காண முயற்சித்தால், சரியான பாதையில் அடி எடுத்து வைக்க முடியும். இதைப் பொறுத்தே உலக மக்களின் நல்வாழ்வு அமைந்திருக்கிறது. யாரையும் தாக்கும் உத்தேசம் ருஷ்யாவுக்கு முன்பும் இல்லை; இப்போதும் இல்லை. ஆனல் மற்ற நாடுகளில் யுத்த ஆயத்தங்கள் நடக்கும்பொழுது, எங்கள் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ள நாங்கள் நடவடிக்கைகள் எடுக்காமல் இருக்க முடியாது. இது இயற்கையே. அவசியமான சாதனங்கள் நிறைந்த பலமுள்ள ராணுவம் எங்களிடம் இருக்கிறது. எனினும் நாங்கள் யுத்தத்தை விரும்ப

வில்லை" என்று ருஷ்யப் பிரதம மந்திரி நிருபர்கள் கூட்டத்தில் கூறினர்.

ஜினிவா மகாநாட்டுக்குப் புறப்படுமுன், அமெரிக்க ஜனதிபதி ஐஸன் ஹவர், வாஷிங்டன் நகரில் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதில், "ருஷ்யப் பிரதம மந்திரி மார்ஷல் புல்கானின், மாஸ்கோவில் நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கள் தான், ருஷ்யாவின் உண்மையான அபிப்பிராயம் என்ருல், ஜினிவா மகாநாட்டில் எவ்வித சங்கடமும் இராது. நம்முடைய வாழ்க்கை முறையை நாம் மற்றவர்கள் மீது சுமத்தவில்லை. சிநேக பாவத்துடன் நாம் வாழ விரும்புகிறேம். மற்றவர்கள் விஷயத்தில் நாம் ஒப்புக் கொள்ளும் உரிமைகளை நமக்கு அளிக்கும் யாவரும் நமது நண்பர்களே. உலகத்தைப் புதுப்பாதையில் நடத்திச் செல்வதற்கு நம்மாலியன்றதைச் செய்வோம். இந்தப் புதுப் பாதை அதிக தூரத்திலிருக்கலாம். ஆனல் மனப்பூர்வமாக நாம் அதைப் பின்பற்றினல் சுகவாழ்வு அடையலாம். உலகத்திலுள்ள நாடுகளில், அரசாங்கங்களிடையே உள்ள உறவுகளின் தன்மை மாற வேண்டும். யுத்தத்துக்குப் பின் ஏற்பட்டுள்ள திகில், அவநம்பிக்கை முதலியவை மாற வேண்டும். ஜினிவா மகாநாட்டில் இன்றையப் பிரச்னைகள் எல்லாம் தீர்ந்து விடாது. சென்ற பத்து வருஷங்களாக உலக நாடுகளிடையே இருந்து வரும் உறவு முறைகளின் தன்மையை மாற்றுவதற்கு முயற்சிக்கவே நான் செல்கிறேன். ஜினிவா மகாநாடு வெற்றியடைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்யும்படி நாட்டுமக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று கூறினர்.

ஜினிவாவுக்குப் புறப்படுமுன், பிரிட்டிஷ் பிரதம மந்திரி அந்தோணி ஈடன், லண்டன் விமான நிலையத்தில் நிருபர்களிடம் பேசுகையில், "உலகத்துக்கு இரண்டே வழிகள்

உண்டு என்பதை எல்லோரும் உணருகின்றனர். நேச உறவு கொண்டு நாம் முன்னேறி, உலகமக்கள் அனைவருக்கும் நன்மை செய்வது ஒரு வழி. இல்லையேல் அளவற்ற பயங்கர சக்திகளால் நாசம் விளைவிப்பது மற்றொரு வழி. ஜினிவா மகாநாட்டில் எல்லாப் பிரச்னைகளிலும் உடன்பாடு ஏற்பட்டு விடும் என்று எதிர்பார்ப்பது, அதிக நம்பிக்கை வைப்பதாகும். ஜெர்மனியை ஐக்கியப்படுத்துவது சம்பந்தமாக முன்னேற்றம் காணலாம். ஜெர்மனியை ஐக்கியப்படுத்தாவிடில் ஐரோப்பாவில் அமைதியையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த முடியாது" என்று கூறினர்.

ஜினிவா மகாநாடு நடைபெறுவதற்கு இரண்டு தினங்களுக்கு முன், டில்லியில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் இந்தியப் பிரதம மந்திரி நேரு பேசுகையில் நால்வர் மகாநாட்டைப் பற்றிக் குறிப்பிட்டார். அவர் பேசுகையில், "எல்லாப் பிரச்னைகளும் நால்வர் மகாநாட்டில் தீர்க்கப்பட்டு விடும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. ஆனல் தற்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலைமையை மாற்றிப் புதியதொரு அமைதியான சூழ்நிலையை நான்கு தலைவர்களும் உண்டாக்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம். மகாநாடு வெற்றிபெறுவற்கு வழி காணவும், உலக முழுமைக்கும் ஒரு புதிய பாதையைக் காட்டவும் உறுதி கொண்டிருப்பதாக அமெரிக்க ஜனதிபதியும், ருஷ்யப் பிரதம மந்திரியும் வெளியிட்ட அறிக்கைகளை வரவேற்கிறேன். நால்வர் மகாநாட்டின் பயனுக உலக மக்கள் உள்ளத்திலிருந்து யுத்த பீதி அகற்றப்படும் என்றும், உலக மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எல்லோரும் பாடுபடுவார்கள் என்றும் நம்புகிறேன். மகாநாட்டில் முக்கியமாக ஐரோப்பியப் பிரச்னைகள் விவாதிக்கப் பெறும். ஆனல் கிழக்கு ஆசியாவில் பார்மோஸா, இந்தோ சீன முதலிய

பிரச்னைகளும் உலக அமைதியைப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

ஜினிவாவில், பழைய சர்வதேச சங்கக் கட்டிடத்தின் கம்பீரமான மாளிகையில் நால்வர் மகாநாடு கூடினர். ஐக்கிய நாடுகள் சபையின் பிரதம காரியதரிசி ஸ்ரீ ஹாமர் ஷீல்டு எல்லோரையும் வரவேற்றூர்.

அமெரிக்க ஜனுதிபதி ருஷ்யப் பிரதமருடன் கைகுலுக்கினூர். பின்னர் தமது பழைய யுத்தகால நண்பரான ருஷ்ய தற்காப்பு மந்திரி ஜுகோவுடன் ஐஸன்ஹவர் சிறிது நேரம் பேசினூர். சுமுகமான சூழ்நிலையில் நால்வர் மகாநாடு ஆரம்பமாயிற்று.

மகாநாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் ஐஸன் ஹவர், "மக்கள் எல்லோரும் ஒரே மாதிரியாக நினைக்க வேண்டுமென்பதில்லை; ஒரே மாதிரியாக நம்ப வேண்டுமென்பதில்லை. எல்லோரும் ஒரே மாதிரியாகப் பணியாற்றலாம். யாரும் தங்கள் திட்டங்களைப் பிறர் மீது திணிக்கக் கூடாது. அரசியல் கொள்கைகளில் வேற்றுமைகள் இருப்பது இயற்கை. ஆனூல் அவற்றிடையே பொதுவாக நேச உடன்பாடு காண்பது சாத்தியமேயாகும். அமெரிக்க மக்கள் ருஷ்ய மக்களுடன் நட்புடன் இருக்கவே விரும்புகிறூர்கள். நமது மக்களிடையிலோ, அல்லது நமது நாடுகளிடையிலோ இயற்கையான வேற்றுமைகள் இல்லை. பீரங்கிகளினூலோ அல்லது கட்டுப்பாடுகளினூலோ ஆன எல்லாத் தீமைகளையும் அகற்ற வேண்டிய காலம் வந்து விட்டது. இதை பரஸ்பரம், மரியாதை, நம்பிக்கை உள்ள சூழ்நிலையில் தான் செய்ய முடியும்" என்று கூறினூர்.

ஐஸன்ஹவர் தமது உரையில் தெரிவித்த யோசனைகள்: (1) ஜெர்மனியின் ஐக்கியம்; அதற்கு முன் சுயேச்சையான தேர்தல், (2) கிழக்கு–மேற்கு ஐரோப்பியப் பாதுகாப்புத்

திட்டம்—அதில் ஜெர்மனிக்கு இடமளித்தல், (3) ருஷ்யச் சார்பு நாடுகள் தங்கள் சொந்த அரசாங்கத்தைத் தேர்ந்தெடுக்க உரிமையளித்தல், (4) ருஷ்யாவுக்கும் மற்ற மேற்கு நாடுகளுக்கும் இடையிலுள்ள தடைகளை அகற்றுதல், (5) அகில உலக கம்யூனிசத்தின் புரட்சி வேலையை நிறுத்துதல், (6) ஆயுதங்களைக் கட்டுப்படுத்துதல், (7) பிற்போக்கான நாடுகளில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வழி காணுதல், (8) ஆக்க வேலைக்கு அணு சக்தியைப் பயன்படுத்துதல்.

ஐஸன்ஹவர், பஞ்சசீலக் கொள்கைகளை ஏற்கும் முறையில் பேசியதாக அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள்.

அடுத்தபடியாக பிரெஞ்சுப் பிரதம மந்திரி பாவ்ரே பேசுகையில், மேற்கு ஐரோப்பிய நாடுகள் பாதுகாப்பு ஸ்தாபனத்தில், மேற்கு ஜெர்மனிக்கு வரையறுத்துள்ள படைபலத்துக்கு மேல், ஐக்கிய ஜெர்மனியின் ஆயுதபலம் இருக்கக் கூடாது என்றும், ஆயுதங்களைக் குறைப்பதால் மீதமாகும் பணத்தைக் கொண்டு. சர்வதேச நிதி அமைத்து அதனைப் பிற்போக்கான நாடுகளின் பொருளாதார உதவிக்குப் பயன்படுத்த வேண்டுமென்றும் கூறினர்.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஈடன் பேசுகையில் ஜெர்மனியின் ஐக்கியம் குறித்து, "(1) நான்கு வல்லரசுகளும் ஐக்கிய ஜெர்மனியும் கொண்ட ஐரோப்பியப் பாதுகாப்புத் திட்டத்தில் சேருவதற்கு பிரிட்டன் தயாராக இருக்கிறது.

"(2) மேற்கு ஐரோப்பாவுக்கும் கிழக்கு ஐரோப்பாவுக்கு மிடையே ராணுவச் சூன்யப் பிரதேசத்தை ஏற்படுத்துவதன் சாத்தியங்களை ஆராயவும் பிரிட்டன் தயாராக இருக்கிறது.

"(3) ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் நாடு எதுவாயிருந்தாலும் சரி, உத்தேசப் பாதுகாப்பு ஒப்பந்த அங்கத்தினர் நாடுகள் அதன் உதவிக்குச் செல்ல வேண்டும்.

"(4) ஜெர்மனியின் இரு பகுதிகளிலும் இருக்கவேண்டிய படை, ஆயுத பலத்தைக் கட்டுப்படுத்துவதைப் பற்றிப் பேசி ஓர் உடன்பாடு காணவேண்டும்.

"இனி யுத்தம் நடந்தால் வெற்றி பெறுவோருக்கு லாபம் கிடைக்காது. வெற்றி பெறுவோர், தோல்வியுறுவோர் ஆகிய இரு சாராரும் நிர்மூலமாவார்கள். நடுநிலைமை வகிப்போரும் அவ்வாறே நாசமடைவர். இந்தப் பயங்கர உண்மைகளை உணர்வதன் மூலம்தான் சமாதானம் ஏற்படலாம். மனித சரித்திரமே கண்டறியாத அலாதியான சூழ்நிலையில் நாம் கூடியுள்ளோம். நாம் சிநேக பாவத்துடன் நடந்துகொண்டால், சுக வாழ்வைப் பெற முடியும். ஆனால் வல்லரசுகளிடையே போர் மூண்டால் சர்வ நாசம் ஏற்படும்" என்று ஈடன் கூறினார்.

கடைசியாகப் பேசிய ருஷ்யப் பிரதம மந்திரி புல்கானின் ஐரோப்பியப் பாதுகாப்புக்கு ஒரு திட்டத்தைச் சமர்ப்பித்தார். வட அட்லாண்டிக் நாடுகள் படைபலம், கிழக்கு நாடுகள் திட்ட படை பலம் இவற்றை இப்போதுள்ள அளவுக்கே கட்டுப்படுத்தி, படிப்படியாக இரு திட்டங்களிலும் படைபலத்தைக் குறைத்துக் கொண்டே வந்து, இறுதியில் இவைகளைக் கலைத்து விடவேண்டும் என்பதே திட்டம். பதினேந்து மேற்கு நாடுகளின் திட்டத்தையும், எட்டு ருஷ்யச் சார்பு நாடுகளின் திட்டத்தையுமே புல்கானின் குறிப்பிட்டார். அந்நியப் படைகள் அனைத்தும் ஐரோப்பாவிலிருந்து வெளியேற வேண்டுமென்றும், பார்மோஸாவில் செஞ்சீனாவின் உரிமையை அங்கீகரித்தால் உலக நெருக்கடி தீரப் பேருதவியாக இருக்குமென்றும் கூறினார்.

பிரெஞ்சுப் பிரதம மந்திரி பாவ்ரே, ருஷ்யப் பிரதம மந்திரிக்கும் அவர் கோஷ்டியினருக்கும் ஒரு விருந்தளித்தார்.

நால்வர் மகாநாட்டில். ஐஸன் ஹவர் மீண்டும் பேசுகையில், "ருஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா ஒருபொழுதும் ஆக்கிரமிப்பு முறையில் போர் தொடுக்காது. அமெரிக்கா தற்காப்புக்காக மட்டுமே போருக்குச் செல்லும், வட அட்லாண்டிக் நாடுகள் ஒப்பந்தக் கொள்கையை ஏற்கும்படி மார்ஷல் ஜுகாவைக் கேட்டுக் கொள்கிறேன். வட அட்லாண்டிக் ஒப்பந்தம் சமாதானத்துக்காக அல்லாமல், சண்டைக்காக இருந்தால், அதன் தலைமைச் சேனதிபதிப் பதவியை நான் ஏற்றுக் கொண்டிருக்க மாட்டேன்" என்றார்.

"ஜெர்மனியின் ஐக்கியம் பற்றிப் பொது உடன்பாடு இருக்கிறது என்றும், அதை நிறைவேற்றும் காலத்தைப் பற்றியே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன" என்றும் ஈடன் கூறினர்.

"ஜெர்மனியின் ஐக்கியத்தைத் தாமதப்படுத்துவது ஐக்கியமே ஏற்படாதது போலத் தான்" என்று பிரெஞ்சுப் பிரதமர் பாவ்ரே கூறினர்.

ஜெர்மனியின் ஐக்கியத்தைப் பற்றிப் பேச இணங்குவதாகவும், கிழக்கு ஆசியா உள்பட எல்லாப் பி ச்னைகளை யும் ஆலோசிக்க வேண்டுமென்றும் புல்கானின் கூறினர்.

ஐரோப்பியப் பாதுகாப்பு, ஜெர்மனி ஐக்கியம் ஆகிய பிரச்னைகளில் உள்ள கருத்து வேற்றுமைகளைக் களைந்து பொதுப்படையான முடிவு காண நான்கு வெளிநாட்டு மந்திரிகளும் கலந்து ஆலோசித்தனர்.

ஐஸன் ஹவர், மார்ஷல் ஜுகாவுக்குப் பகல் விருந்தளித்தார்.

இந்தோசீனுவில் சைகோன் நகரில் இந்தோ–சீனு போர் நிறுத்த கட்டுப்பாட்டுக் கமிஷனின் அங்கத்தினர்கள் தங்கியுள்ள ஹோட்டல்களில் கம்யூனிஸ்டு எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் புகுந்து கலகம் செய்து, அங்கத்தினர்கள் அறைகளிலிருந்த சாமான்களை எல்லாம் நாசமாக்கி, தஸ்தாவேஜிகளை எல்லாம் வெளியே தூக்கி எறிந்தனர். போலீசார் சுட்டதன் பேரில் அமளி அடங்கியது. இந்த யுத்த நிறுத்தக் கமிஷன் தலைவர் இந்தியரான ஸ்ரீ. எம். ஜி. தேசாய்.

சைகோனில் வேண்டுமென்றே திட்டமிட்டுக் கலகம் செய்யப்பட்டதாகவும், இது பற்றி சம்பந்தப்பட்ட கட்சிகளுக்கு அவசியமான கட்டளைகள் அனுப்பும்படி பிரிட்டிஷ் பிரதமர் ஈடனையும், ருஷ்ய வெளிநாட்டு மந்திரி மாலடோவையும் இந்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டது.

ஜினிவாவில், சைகோன் கலகம் சம்பந்தமாக ஈடனும், பிரெஞ்சுப் பிரதமர் பாவ்ரேயும் சந்தித்துப் பேசினர். பின்னர் பாவ்ரேயும், ஐஸன் ஹவரும் சந்தித்துப் பேசினர்.

நால்வர் மகாநாட்டில் ஆயுதக்குறைப்பு பற்றி ஆலோசனை நடத்தினர்.

ஆயுதக் குறைப்பை நிறைவேற்றுவதற்கு முதல் படியாக ஹைட்ரஜன், அணு ஆயுதங்கள் வைத்துக் கொண்டுள்ள நாடுகள் அந்த ஆயுதங்களின் சோதனைகளை நிறுத்த வேண்டுமென்றும், அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளும், ருஷ்ய கோஷ்டி நாடுகளும் ஒருவரை ஒருவர் ஆக்கிரமிப்பதில்லை என்று ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்றும் புல்கானின் கூறினர்.

"தற்பொழுது பிரிட்டன் ஹைட்ரஜன் குண்டு தயாரித்துக் கொண்டிருக்கிறது" என்று ஈடன் கூறினர்.

ஐஸன் ஹவர் பின்வரும் பிரேரணைகளை ருஷ்யாவுக்கு சமர்ப்பித்தார்.

"(1) நமது ராணுவ ஸ்தாபனங்களைப் பற்றி முழு விவரங்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்ள வேண்டும்.

"(2) ராணுவ ஸ்தலங்களை விமானத்திலிருந்து படம் பிடிக்க நமது நாடுகளில் வசதிகள் செய்து தரவேண்டும். எங்கள் நாட்டில் எல்லா வசதிகளும் செய்து தருகிறோம். படங்களை உங்கள் நாட்டுக்குக் கொண்டு போய் ஆராய்ந்து பார்க்கலாம்.

"(3) ராணுவ ஸ்தலங்களைப் பார்வையிடவும் சுலபமான முறை ஏற்படுத்த முடியும்."

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஈடன், "ஐஸன் ஹவரின் யோசனை தீர்க்காலோசனை மிக்கது" என்றார். பிரெஞ்சுப் பிரதம மந்திரியும் இதனை ஆதரித்தார்.

இந்த யோசனைகள், வெளிநாட்டு மந்திரிகளின் பரிசீலனைக்கு அனுப்பப் பெற்றன.

அமெரிக்காவைப் போலவே ருஷ்யாவும் சமாதானத்தில் உண்மையான ஆர்வம் கொண்டிருக்கிறது என்பதில் தமக்குச் சந்தேகமே கிடையாது என்றும் ஐஸன் ஹவர் கூறினார்.

ஆறு தினங்களுக்குப் பின், நால்வர் மகாநாடு முடிந்தது. எல்லாப் பிரச்னைகளிலும் ஒரு பொது உடன்பாடு ஏற்பட்டதாக எல்லாத் தரப்பினரும் கூறினர்.

ஆயுதக்குறைப்புப் பிரச்னையை ஐக்கிய நாடுகள் சபை நான்கு வல்லரசுகளின் பிரதிநிதிகளும் கானடாவின் பிரதியும் ஆக ஐவர் கொண்ட குழுவுக்கு அனுப்ப புல்கானின் சம்மதித்தார்.

நால்வர் மகாநாடு கட்டளையிடும் பிரச்னைகளைப் பற்றி விவாதிக்க, அக்டோபர் மாதத்தில் நான்கு நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் கூடுவார்கள்.

# கல்வித்துறையில் கட்டுப்பாடும் ஒழுங்கும்

இப்பொழுது நாம் இந்தியாவில் கல்வி அமைப்படை அடியோடு மாற்றும் காலத் துவக்கத்தி லிருப்பதால், கல்வி முறையின் அடிப்படைக்கொள்கைகள் சிலவற்றைப் பற்றிப் புது நோக்குடன் சிந்திக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. சீரமைப்பு முயற்சிகளை எடுத்த எடுப்பிலேயே பயனற்றதாகச் செய்யும் வகையில் மாணவர்களிடையேகட்டுப் பாடும் ஒழுங்கும் குறைந்திருப்பதைப் பற்றி நாம் கவனிக்கத் தான் வேண்டும்.

கல்வித்துறையில் கட்டுப்பாடு, ஒழுங்கு ஆகிய அம்சங்களின் உரிய ஸ்தானத்தை நாம் சரிவர அறிந்துகொள்ள வேண்டுமானால், நாகரிக சமூகத்தில் கல்வியின் நோக்கமும், வேலையும் என்ன என்பது பற்றியும், இந்த நோக்கத்தை எந்த முறை அல்லது வழிகள் மூலம் சாதிப்பது என்பது பற்றியும் திட்டவட்டமான சில கருத்துக்களைக் கொண்டிருக்க வேண்டியது அவசியம். மனித சமுதாயத்தில் கல்வியின் காரியம் யாது என்ற அடிப்படை நோக்கத்தை அனுசரித்துக் கட்டுப்பாடு, ஒழுங்கு சம்பந்தமான பிரச்னையை ஆராய்வோம்.

கல்வி மனித சமுதாயத்துக்கு மட்டும் விசேஷமானதோர் அம்சமாகும். சமூக ரீதியில் இவ்விஷயத்தை நோக்குவோமேயானல், இளைஞர்களின் வளர்ச்சியைச் சமுதாய அமைப்புக்கேற்ற வகையில் உருவாக்கி, அப்பாதையில்

அவர்கள் செல்லும்படி செய்து சமுதாய வாழ்வை நிலை நிறுத்துவதுடன், எதிர் காலத்திலும் இது சரியான வழியில் முன்னேறுவதற்கு உறுதி செய்வதற்காகச் செய்யும் ஒரு முயற்சியே கல்வி என்று கூறலாம். தனிப்பட்ட ரீதியில் இதை ஊடுருவிப் பார்த்தால் இது இளைஞனுக்கு அனுகூலமான சூழ்நிலையை ஏற்படுத்தி, அவனிடம் பொதிந்துகிடக்கும் ஆற்றல்கள் வெளிப்பட்டு, அவைகளின் வளர்ச்சிக்கும் பிரயோகத்துக்கும் வழி செய்வதற்கான முயற்சியாகும். கல்வி யளிப்போரின் வேலை, இயற்கை வழியான அபிவிருத்தி சரியான மார்க்கங்களில் செல்லுவதற்கான திட்டங்களை வகுத்துக் கொடுத்து அதன் மூலம் கல்வியின் சமூக, தனிப்பட்ட நோக்கங்களிடையே ஒரு சமன நிலை ஏற்படுத்துவதாகும்.

ஆதிகாலந்தொட்டே சகல ஜீவராசிகளுக்கும் பக்குவமடைதல், அபிவிருத்தி, கற்றல் ஆகியவை பொது அம்சங்கள். முன்னேற்றப் பாதையில் நாம் போகப்போக, அப்பக்குவ காலத்தின் அளவு அதிகமாகிக்கொண்டே வருகிறது. தனிப்பட்டவரின் பூரண வளர்ச்சி பக்குவப்படுவதால் மட்டும் பாதிக்கப்படவில்லை; இது அனுபவத்தினாலும் கற்றலினாலும் பாதிக்கப்படுகிறது. ஆனால் மனித வர்க்கத்தைத் தவிர வேறு ஜீவ ராசிகள் சம்பந்தத்தில் இயற்கைமுறையாக பரிபக்குவமடைவதையும், கற்பதையும் உருப்படுத்த திட்டவட்டமான உணர்வோடு கூடிய முயற்சிகள் செய்யப்படுவதில்லை. சமூக இளைஞர்களை முறையான கட்டுக்கு உட்படுத்தி, சரியான வகையில் வளர்ச்சியுறும்படி செய்வதற்குப் பள்ளிக்கூடம் போன்ற ஸ்தாபனம் மனித சமுதாயத்தைத் தவிர வேறு எங்கும் காணப்படவில்லை; மனித சமூகத்தில் எல்லாவற்றிலும், அவை எவ்வளவு பழமையானதாக இருந்தபோதிலுங் கூட, பள்ளிக்கூடத்தைப் போன்றதோர் அமைப்பு அவசியம் இருந்தே வருகிறது.

பழங்குடி மக்களின் கல்வியின் முக்கிய நோக்கம் இன ஒற்றுமையை நிலைநிறுத்துவதேயாகும். இம்முறையில் குறைபாடு என்னவென்றால், இது சிந்தனை அல்லது பழக்கத்துக்கான சுய ஊக்கத்தை அழித்துவிடுகிறது; ஆகையினால் நிர்மாண மூலாதாரங்களும் அழிந்து விடுகின்றன; இதன் விளைவாக சமூக முன்னேற்றமும், அபிவிருத்தியும் தடைப்படுகின்றன.

நவீனத்தை விலக்க எவ்வளவு முயற்சிகள் செய்யப்பட்ட போதிலும், இவ்விதம் அடுக்கடுக்காகச் செய்யப்படுவதற்கு எதிரான சக்திகள் இருந்தே வருகின்றன. இவைகளில் முக்கியமானதாக, பழங்குடி இனத்தினரிடையே கலப்பு வாழ்க்கையைச் சொல்லலாம்; இதன் விளைவாக கலாசாரங்களில் கலப்பு ஏற்படுகிறது. இந்த வழியில் புதிதும் சிக்கலானதுமான பல சமூக அமைப்புகள் தோன்றுகின்றன. நாகரிகத்தின் ஆரம்பம் உருவாகிறது. நாகரிக சமூகத்தில் கல்விக்கு இரு பொறுப்புகள் உள்ளன. ஒன்று பண்டையக் கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் பாதுகாப்பது; மற்றொன்று மனிதவர்க்கத்தின் முயற்சிக்கும் சாதனைக்கும் புதிய துறைகளைக் கொடுப்பதற்காகச் சிந்தனையிலும், பழக்கத்திலும் புதிய வழிகளைக் கண்டுபிடிப்பது. எனவே தற்காலத்தில் கல்வித்துறையில் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்தும் பிரச்னை, சமூகப் பிணைப்பைப் பாதுகாத்து வருவதற்கு ஒரே வழியான பரம்பரைக்கு இணங்கியிருத்தல் என்ற கோட்பாட்டுக்கும், புதியன கண்டுபிடிப்பதற்கும், புதியமதிப்பீடுகளுக்கும் அவசியமெனக் கருதப்படும் தனிப்பட்டோர் சிந்தனை, செயல் சுதந்திரக் கோட்பாட்டுக்குமிடையே ஒரு சமரசங் காணுவதேயாகும்.

பரம்பரைக்கிணைய நடப்பதற்கும், சுதந்திரத்துக்குமிடையேயுள்ள பிளவு உண்மையானதல்ல; வெளிப்படை

யாகத் தோன்றுவதொன்றேயாகும். உண்மையில் இவை பூரணக் கல்வி முறையின் ஒற்றுமையான அம்சங்களே; தனிப்பட்ட ஒவ்வொருவனும் மனிதனின் பண்டையச் சாதனைகளைச் பெறத்தான் செய்கிருன்; எனவே இவற்றை ஒன்றுக்கும் உதவாதவைகளென்று உதறித்தள்ளாமல், இவற்றின் உண்மையான உபயோகத்தையும் மதிப்பையும் அவன் சரிவர உணர்ந்தால் அவனது நிர்மாணத் திறமைகள் சரிவர இயங்கி வளர்ச்சியுறுவதற்கு வழியேற்படும். ஆகையால் இவ்விரு அம்சங்களில் ஏதாவதொன்றை விலக்கி, மற்றென்றை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்படும் எந்தவிதமான கல்வி முறையும் தோல்வியுறத் தான் செய்யும். நவீன கல்வி என்றழைக்கப்படும் முறையில் சுதந்திரக் கோட்பாடு சற்று அளவுக்கு மிஞ்சிவிட்டது; சுதந்திரம் மித மிஞ்சிப்போனல் என்ன நேரிடும் என்று சொல்ல முடியாது; உண்மையில், இது கல்விக் கருத்துக்கே நேர் விரோதமானது. கல்வி என்பது இளைஞர்களின் வளர்ச்சியை விரும்பத்தக்க சில மார்க்கங்களில் செல்லும்படி சமூகம் தூண்டவும், வசீகரிக்கவும் செய்யும் முயற்சி என்ருல், இளைஞர்கள் பரிபூரண சுதந்திரம் கோரினுலும் சரி, பூரண சுதந்திரம் இவர்களுக்கு அளிக்கப்பட்டாலும் சரி கல்வி அளிப்பதென்பது சாத்தியமான காரிய மாகாது. அப்படி ஒரு வாலிபன் சுதந்திர உரிமை கோருவானேயானல், அவனுக்குக் கல்வி தேவையில்லை என்றும், அவன் ஏற்கெனவே பக்குவ நிலை அடைந்து விட்டான் என்றும், தன்னிஷ்டம் போல் நடந்துகொள்ளும் நிலையை அவன் அடைந்து விட்டான் என்றும் ஆகும்.

மாணவர்களுக்குச் சுயேச்சை அதிகமாக உள்ள பள்ளிக்கூடம் கலவரமும் கூச்சலும் நிலவும் ஓரிடமாகவிருக்குமே தவிர, குறிப்பிட்ட சில லட்சிய சித்திக்காக ஏற்படுத்

தப்பட்ட ஸ்தாபனமாக இருக்க முடியாது. அதேபோல் வெறும் பரம்பரைக்கு மதிப்புக் கொடுக்கும் பள்ளிக்கூடத்தில் ஜீவ சக்தியற்ற நடைமுறை, செய்ததையே திரும்பத் திரும்பச் செய்தல், கண்மூடித்தனமாகப் பின் பற்றுதல் ஆகியவையே தலைமையாகக் காணப்படும். தனிப்பட்டவரின் உடல், உள்ளம், திறமைகளின் சுயேச்சையான வளர்ச்சிக்கு இடமிராது. இம்மாதிரியான ஸ்தாபனங்கள் யந்திரங்கள் போல் இயங்கும் மனிதக் கருவிகளையே உற்பத்தி செய்யும்; சுயபுத்தியும், ஊக்கமும், சுய நம்பிக்கையும் கொண்ட தனி மனிதர்களை உருவாக்க மாட்டா.

பழமைக்கு இணங்க நடத்தலும், பழைய சம்பிரதாயம் திரும்பத் திரும்பச் செய்தல் ஆகியவையும் நூதன சாதனைகளுக்கு விரோதமானவையல்ல; ஆனால் மனிதனைப் புதிய வழிகளில் செலுத்தி, புது விஷயங்களைக் கண்டு கையாள்வதற்கான அடிப்படை ஆதாரங்களை இவை அளிக்கின்றன. நடனம், சங்கீதம் போன்ற பல நுண்கலைகளில் திரும்பத் திரும்பச் சில காரியங்களைச் செய்வது முறையாக இருந்து வருகின்றன. புதிய செயற்கைகளின் மூலம் பரம்பரை முறைகள் மாறி நூதன முறைகள் ஏற்படக்கூடும்.

தனிப்பட்டவர் தமது சுயேச்சைக்கும் சுய கற்பனைச் சாதுரியத்துக்கும் முறையான உருவளிக்கும் பொருட்டு தன்னிச்சையாக ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் உடன்படுவதில் ஆழ்ந்ததும் தனிப்பட்டதுமான விசேஷம் இருக்கிறது. இதன்படி, நிர்ணயம் செய்து கொள்ளப்பட்ட ஒரு லட்சியத்தையோ காரியத்தையோ செய்து முடிப்பதற்காக தனிப்பட்ட உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்வது தான் ஒழுங்கான கட்டுப்பாடாகும். பிரசித்தி பெற்ற அறிவாளிகள், கலைஞர்கள், கவிஞர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், காரியசித்தி பெற்றவர்கள் எல்லோரும் இவ்விதமான ஒழுங்குக்குத் தங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டவர்களே,

கல்வித் துறையில் கட்டுப்பாட்டுக்கும் ஒழுங்குக்கும் உண்மையான மதிப்பிருக்க வேண்டுமானால், அவை ஒரு லட்சிய சித்திக்காகப் பழமைக்கிணங்கி நடப்பது தன்னிச்சையாகக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு நடப்பதாக மாற வேண்டும். இவ்வித மன மாறுதல் ஏற்படுவது நடக்க முடியாத காரியமல்ல. ஆனால் இதற்கு கல்வித் துறையினர் இதையே தங்கள் கடைசிக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் அமுல் நடத்துவது இந்த லட்சியத்துக்காகவே இருக்க வேண்டும்.

முறையாகவும், ஒழுங்காகவும் நடப்பதைக் குழந்தைகள் வெறுப்பதில்லை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. உண்மையில் பழமையான முறையில் காரியங்களைச் செய்வதிலும், பழக்கமான வேலைகளை மறுபடியும் மறுபடியும் செய்வதையும் குழந்தைகள் விரும்பவே செய்கிறார்கள். ஆனால் அவர்களை இப்படிச் செய்யும்படி கட்டாயப்படுத்துவதையும், கடுமையாக நடத்துவதையுமே அவர்கள் விரும்புவதில்லை. பாடின பாட்டுக்களையே பாடுவது, விளையாடின விளையாட்டுக்களிலேயே ஈடுபடுவது, பழைய வேடிக்கைகளைச் செய்வது முதலியவைகள் இவர்களுக்கு சலிப்பைத் தருவதில்லை. இவை ஒவ்வொரு தடவை செய்யும்போதும் மகிழ்ச்சியளிக்கும் சடங்குகளாக மாறிவிடுகின்றன. நாளாவட்டத்தில் இவை தனி முயற்சி தேவைப்படாத பழக்கங்களாக ஆகிவிடுகின்றன. எனவே செய்த காரியத்தையே திரும்பத் திரும்பச் செய்வதில் குழந்தைகளுக்கு உள்ள இந்த விருப்பத்தை எதிர்காலத்தில் அவர்களைக் கஷ்டங்கள், துன்பங்களிலிருந்து விடுவிக்கக்கூடிய சில நற்பழக்கங்களை மேற்கொள்ளுவதில் திருப்பிவிடலாம். மல ஜலங் கழித்தல், உணவருந்துதல், உறங்குதல், உடையுடுத்தல் போன்ற இயற்கைக் கடன்களை முறையாகச் செய்யும் பழக்கம் இளம் வயதிலேயே ஏற்படும்படி செய்ய வேண்டும்.

இது விஷயத்தில் சரியான கட்டுத் திட்டம் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கதாகும். எப்பொழுது வேண்டுமானாலும் குழந்தைகள் சாப்பிடுகின்றன. அது மட்டுமல்ல; தங்களுக்கு இஷ்டமானவைகளையும் உண்ணுகின்றன. குறிப்பிட்ட நேரங்களில் தூங்கப் போவதில்லை. மரியாதையான நடத்தை, பழக்க வழக்கங்களிலும் பயிற்சி அளிக்கப்படுவதில்லை.

கட்டுப்பாடும், நன்னடத்தையும், ஒழுங்கும் பிறப்பிலிருந்தே குடும்பத்திலேயே ஆரம்பிக்க வேண்டும். இந்த அடிப்படை நிலைக்களன் சரியாக இல்லையானால் கல்வி போதனையாளரின் வேலை மிகக் கஷ்டமானதாக ஆகிவிடுகிறது.

குழந்தையின் இளமை ஒழுக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் இந்தியாவில் ஒவ்வொரு குடும்பமும் பயிற்சிக்கூடமாக ஆகும்வரை நாம் காத்திருக்க வேண்டுமானால், எல்லையற்ற காலம் வரை நாம் காத்திருக்க வேண்டியதுதான் என்று எனக்குத் தெரியும். இதற்குக் கற்றறிந்த சுய கட்டுப்பாடுள்ள பெற்றோர்கள் மட்டுமிருந்தால் போதாது; நாம் இவர்களுக்குச் சரியான குழந்தை வளர்ப்பில் பயிற்சியும் அளிக்க வேண்டும். வெறும் கல்வி மட்டும் இதற்குப் போதாது. ஏனென்றால் கல்வி பெற்றுச் செல்வந்தர்களாக உள்ள குடும்பங்களிலும் சரி, எழுத்தறி வில்லாத குடும்பங்களிலும் சரி இளங்குழந்தைகள் கட்டுப்பாட்டுக்குட்படாமல் வளர்ந்து வருவது வெகு சர்வ சாதாரண விஷயமே. இது சமூகத்தில் எல்லாப் பிரிவினர்களிடையேயும் காணப்படுகிறது.

குடும்பத்தின் நிலைமைகளைச் சீர் திருத்தும் வேலை சிரமமானதாக இருக்கலாம்; ஆனால் இது அடியோடு ஆகாத காரியம் என்று நான் நினைக்கவில்லை. நாம் குறிக்கோளாகக்

கொண்டிருக்கும் செல்வமும், சந்தோஷமும் நிலவும் சமுதாயத்தை நாம் நிர்மாணிக்கவேண்டுமானால் இதுமாதிரியான காரியம் செய்துதான் ஆகவேண்டும். பெற்றோர்களுக்குக் குழந்தைகள் வளர்ப்பில், அதாவது தாய்மைத் தொழிலில் பயிற்சி அளிப்பது சமுதாய நலத் திட்டத்தில் ஒரு பகுதியாக இருக்க வேண்டியது அவசியம்.

இப்பொழுது நமது கவனம் முழுவதையும் பள்ளிக்கூடம், சர்வகலாசாலைக்குத் திருப்புவோம். எந்தக் கொள்கைகளை லட்சியமாகக் கொள்வது, எவற்றைப் பின்பற்றுவது என்ற விஷயத்தில் நாகரிக சமூகம் இப்பொழுது இந்தியாவில் மட்டுமின்றி, உலகம் முழுமையிலுமே குழப்பமும், கலவரமுமான நிலையிலேயே இருந்து வருகிறது. கருத்து வேற்றுமை, கொள்கைச் சண்டைகள் உள்ள இந்நிலையில், கல்வித்துறையிலும் சமூகத்திலுள்ள கலவரமும், குழப்பமும் பிரதிபலிக்கின்றன. ஆகையினால் புரையோடிப்போன இப்புண் ஆற்றப்படாவிட்டால், இளைஞர்களை எந்தவிதமான கட்டுப்பாடான முறைப்படியும் பயில்விப்பது சாத்தியமாகாது. உதாரணமாக தனிப்பட்டவர் சுயேச்சைக்கு அதிக மதிப்புக் கொடுக்கும் கோஷ்டியினர் கட்டுப்பாடான நடத்தை என்று கருதுவதற்கும், யதேச்சையதிகாரத்தையும், கம்யூனிசத்தையும் ஆதரிப்பவர்கள் கருதுவதற்கும் வேற்றுமையிருப்பதைக் கூறலாம். புரட்சி மூலம் புதிய சமுதாயத்தை நிறுவ முற்பட்டிருப்பவர்கள் கட்டுப்பாடு பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயம் அஹிம்சா தர்மத்தில் நம்பிக்கை கொண்டுள்ளவர்களின் கருத்துக்கு மாறுபட்டுத் தானிருக்கும், உலகத்தில் இன்று இளைஞர்களிடையே கட்டுப்பாடும் ஒழுங்கும் குறைவாக இருப்பதற்கு முக்கிய காரணம் சமூக லட்சியம் பற்றித் தெளிவானதும் ஏகோபித்த அங்கீகாரம் பெற்றதுமான கொள்கை இல்லாமை தான். கல்வித்துறையினரிடத்தில்

தங்கள் குறிக்கோள் அல்லது நோக்கம் பற்றி ஒருமைப்பாடு கிடையாது. இவர்களின் ஆதரவில் விடப்பட்டிருக்கும் இளைஞர்கள் ஒரு சமயம் ஒரு வழியில் செலுத்தப்படுகிறார்கள்; மறு சமயம் அதற்கு நேர் மாறான பாதையில் திருப்பப்படுகிறார்கள். இவ்விதமான நிலைமையைச் சீர்திருத்தத் தன்னாலான வரை முயற்சி செய்ய வேண்டியது ஒவ்வொரு கல்வியாளரின் கடமையாகும். இதற்குக் கல்வித் துறையாளர் நடைமுறைப்பிரச்னைத் தகராறுகளில் கலந்துகொள்ளக்கூடாது. இவை சம்பந்தத்தில் கட்சி மனப்பான்மை வைத்துக்கொள்ளக் கூடாது; நடு நிலைமையாகவே இருக்க வேண்டும். இதற்கு அவர் சொந்த ஹோதாவில் அரசியல், ஒழுக்கம், மதம் சம்பந்தப்பட்ட முக்கிய விஷயங்களில் தனி அபிப்பிராயங்கள் எதுவும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று அர்த்தமில்லை. இவை சம்பந்தத்தில் தனிப்பட்ட கருத்துக்களைக் கொள்ள அவருக்கு சர்வஉரிமையும் உண்டு. ஆனால் இவை அவரது உத்தியோகப் பொறுப்பை நிறைவேற்றுவதில் பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உபாத்தியாயர் மதமாற்றப் பிரசாரகர் அல்ல. அவர் வேலை அவர் கல்வி புகட்டுபவர்களுக்கு ஒரு கேள்விக்கு எத்தனை விதமான விடைகளுண்டோ அவ்வளவையும் அறிவிப்பதாகும்; எவ்விடை இஷ்டமோ அதை அவரவர் எடுத்துக் கொள்ளட்டும்.

எந்தவொரு பள்ளிக்கூடத்திலோ அல்லது கல்லூரியிலோ பெரிய அளவில் ஒழுங்கீனமும், கட்டுப்பாடின்மையும் ஏற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இது அந்த ஸ்தாபனத்தின் ஆசிரியர்களால் தூண்டப்பட்டோ அல்லது ஊக்குவிக்கப்பட்டோ தானிருந்து வந்திருக்கிற தென்பது கல்வி அதிகாரிகள் யாவருக்கும் தெரிந்த விஷயமே. ஆனால் துரதிருஷ்டவசமாகத் தனிப்பட்ட ஓர் ஆசிரியர் மீது இது சம்பந்தமாகக் குற்றம் சாட்டுவதற்கு ஹேது

வான சாட்சியம் இவர்களைத் தண்டனைக்குட்படுத்தும் அளவுக்கு இல்லாமலிருக்கிறது. கல்வித் துறையில் இவ்விதமான நாச வேலைகள் நடப்பதற்குச் சுயநலமே காரணம்; ஆனால் இப்படிச் செய்பவர்கள் தங்கள் குற்றத்தை மறைக்க ஏதாவது ஒரு லட்சியத்தைக் கடைப்பிடித்து நடப்பவர்கள் போல் நடந்து கொள்ளுகிறார்கள்.

ஒரு பள்ளிக்கூடம் அல்லது கல்லூரியின் ஆசிரியர்களே ஒழுக்கத்துக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்படாமல், இதுபோன்ற துரோகச் செயல்களில் ஈடுபடுபவர்களாக இருந்தால், அதன் மாணவர்களிடையே கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் எப்படி வளர்க்க முடியும்? முடியாதென்பது தெளிவு. ஒரு கல்வி ஸ்தாபனத்தின் ஓர் உபாத்தியாயருக்கோ அல்லது ஒரு சிலருக்கோ அந்த ஸ்தாபனத் தலைவர் மீது நியாயமான மனக்கசப்பு இருக்கலாம்; அவர்களுக்கு ஏதாவது அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கலாம். இது மாதிரி சந்தர்ப்பத்தில் தங்கள் குறைபாடுகளை வெளிப்படையாக வந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முறையிடுவதே சரியான வழி. இவ்விதமான நடவடிக்கையினால் எந்த பரிகாரமும் ஏற்படாவிட்டால் இவர்கள் தங்கள் உத்தியோகங்களை ராஜினாமாச் செய்துவிட்டு வேறு எங்காவது வேலைக்குப் போகலாம். ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் சரி, தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவர்களைத் தங்கள் சுயநலத்துக்காகப் பயன்படுத்தி அவர்கள் அத்துமீறிய செயல்களில் ஈடுபடும்படி தூண்டுவது நியாயமல்ல; இது இவர்கள் மீதே பாயும் என்பதை இவர்கள் மறந்துவிடக்கூடாது.

ஆசிரியர் தொழிலில் இதுமாதிரியான கருங்காலிகளுக்கு இதற்கு முன்னர் எல்லாம் அதிகமான இடம் கொடுத்துவிடப்பட்டிருந்தது; இனி அவர்களைக் கடுமையாக

நடத்த வேண்டியது அவசியம். ஓர் உபாத்தியாயரின் உண்மை விசுவாசத்தைப் பற்றிச் சந்தேகிக்கப் போதிய காரணமிருந்தால், அதிகாரிகள் அவருக்குச் சரியான எச்சரிக்கை கொடுத்துவிடலாம். அப்படிச் செய்ததற்குப் பின்னும் இவ்விதமான நாச காரியங்களில் அவர் தொடர்ந்து ஈடுபட்டு வந்தால், கூடுமான விரைவில் அவரை வேலையை விட்டு விலக்கிவிட வேண்டும். இக்காரணத்தை முன்னிட்டு உபாத்தியாயர்கள் பழிவாங்கப்படாமல் தடுக்கப்படுவதற்காக, வேலையினின்றும் நீக்கப்பட்ட ஆசிரியர்கள் மேல் கல்வியதிகாரிக்கு அப்பீல் செய்துகொள்ள உரிமையளிக்கப்பட வேண்டும்; பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் கல்வி மந்திரிக்கும், கல்லூரி ஆசிரியர்கள் உப அத்யட்சருக்கும் அப்பீல் செய்துகொள்ள அனுமதிக்க வேண்டும்.

தங்கள் உத்தியோகத்துக்குக் கண்யமளிக்காத செயல்களில் ஈடுபடும் உபாத்தியாயர்கள் தங்கள் நடத்தை சரியானதென்று வாதாடுவதற்காகத் தங்கள் சம்பளம் கேவலமான அளவுக்கு மிகக் குறைவு என்றும், வேலை நிபந்தனைகளும் தாங்கவொண்ணுதவை என்றும் கூறுவது வழக்கம். உபாத்தியாயர்களுக்கு நல்ல சம்பளம் கொடுக்கப்பட வேண்டும், அவர்கள் வேலை நிபந்தனைகள் சீர்செய்யப்பட வேண்டும் என்பதற்கான இயக்கத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். ஆனால் சம்பளக் குறைவும், சிரமமான வேலை நிலைமையும் ஒருவர் நாசவேலை செய்வதற்கு நியாயமான காரணங்களாகமாட்டா. இப்படிச் செய்பவர்கள் சர்க்காருக்கும் தங்களின் அதிகாரிகளுக்கும் மட்டும் எதிரிடையான குற்றங்களைப் புரிவதில்லை; நாட்டின் இளைஞர்களையே காட்டிக்கொடுக்கிருர்கள். எனவே எதிர்காலத்தின் நலத்துக்கும் துரோகம் செய்யும் குற்றவாளிகளாவர்.

கல்வி போதனை தீவிரமான காரியமாகும். ஒரு துணிப் பையில் துணிகளைத் திணிப்பது போல நமது மாணவர்களின் மனத்தில் நாம் அறிவையோ அல்லது சீலத்தையோ புகுத்திவிட முடியாது. குழந்தைகள் கேட்பது மூலம் மட்டும் கற்றுக்கொள்வதில்லை; செய்வதனுல்தான் தெரிந்து கொள்ளுகின்றன. இந்த உண்மைகளைத்தான் தேசீயத் தலைவர்களும் சரி, கல்வித் துறையினரும் சரி அடிக்கடி மறந்துவிடுகிருர்கள். தங்கள் சொற்கள் கேட்போரின் நடத்தையையோ வாழ்க்கையையோ எவ்விதத்திலும் உருப்படுத்தவில்லையென்பதை உணராமல் இவர்கள் ஓயாமல் பிரசாரம் செய்துகொண்டே போகிருர்கள். கல்வி போதனை முறையில், போதிப்போர், கல்வி கற்போர் ஆகிய இருவரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தீவிரமாகப் பங்கு கொள்வதன் மூலம் கற்றுக்கொள்ளுவது குழந்தையின் ஓர் அம்சமாகவே ஆகிவிடுகிறது. கேள்விமூலம் கற்றுக்கொள்வதோ அல்லது ஒருவரைப் பார்த்து அப்படி நடப்பதோ அல்லது கட்டாய போதனையோ குழந்தைகளுள்ளத்தில் வேரூன்றுவதில்லை; அவற்றைக் குழந்தைகள் மறந்துவிடுகின்றன. மேலே கூறப்பட்டது அறிவு புகட்டுவதற்குமட்டும் பொருந்தியதல்ல; கட்டுப்பாட்டு வளர்ச்சிக்கும், ஒழுக்கம் ஏற்படுவதற்கும் பொருந்தும்.

கல்வி கற்பதில் நமது பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் எந்த அளவுக்கு மாணவர்கள் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்ளும் முறையைக் கையாண்டு வருகின்றன? ஒளிவு மறைவின்றிக் கூறுவோமேயாளுல் இப்படிச் செய்வது மிகக் குறைவென்றே சொல்ல வேண்டும். அப்படி அல்லவென்று மறுக்கப்படலாம், அல்லது பாவனை செய்யப்படலாம்; அவ்வளவுதான். கல்வி போதனைக்கும், ஒழுக்கத்தை ஏற்படுத்துவதற்கும் கையாளப்படும் வழி முறைகள் அடியோடு மாற்றியமைக்கப்படாவிட்டால், எதிர்காலத்தைப் பற்றி நாம் நம்பிக்கையுடனிருக்க முடியாது.

சர்வகலாசாலை அந்தஸ்தில் கட்டுப்பாடு, ஒழுங்குபற்றி சுருக்கமாக இப்பொழுது ஆராய்வோம். துரதிருஷ்டவசமாக இப்பொழுது சர்வகலாசாலை உலகில் இருக்கும் நிலைமை, குடும்பத்திலும், பள்ளிக்கூடத்திலும் வளர்ந்து வந்த கட்டுப்பாடின்மையைத் தடைசெய்வதற்குப் பதிலாக சர்வகலாசாலைகள், ஒழுங்கீனம், கட்டுப்பாட்டை மீறுதல் ஆகிய குணங்கள் அதிகமான அளவிலும், மிகக் கெடுதல் விளைக்கும் வகையிலும் வெளிப்படுவதற்கேற்ற ஸ்தாபனங்களாக இருக்கின்றன.

சர்வகலாசாலைகளில் கட்டுப்பாட்டைக் குலைக்க மாணவர்களின் சங்கங்கள் எவ்வளவு தூரம் பொறுப்பாக இருந்து வருகின்றனவென்பதை ஆராய்வோம். மாணவர்கள் சங்கங்களின் நோக்கம், வேலை யாது என்பது பற்றி நாட்டில் மாணவர்களிடை மட்டுமின்றி, சர்க்கார், சர்வகலாசாலை அதிகாரிகள் ஆகியோரிடையேயும் தப்பான கருத்து இருந்து வருகிறது. இவை மாணவர்கள் நலம் என்று கருதப்படும் பாத்தியதைகளைப் பாதுகாக்கும் தொழிலாளர் சங்கங்கள் போலவும், கல்விக் கொள்கை,நிர்வாகத்தை உருவாக்கும் பூரண சுதந்திர சட்ட நிரூபண சபைகள் போலவும் இயங்கி வருகின்றன. இவ்விரு கோட்பாடுகளுமே அடியோடு தப்பானவை; கல்வியின் நோக்கத்துக்கே நேர்மாறானவை. ஒரு மாணவன் என்னதான் முன்னேற்றமடைந்தவனாக இருந்தபோதிலுங்கூட, இவன் சமூகத்தில் பக்குவமடையாத நிலையிலுள்ள ஒருவனேயாவான். இன்றும் அவன் பயிற்சிபெறும் நிலையிலேயே இருக்கிறான்; இப்பயிற்சியில் அவன் தீவிரமானதும், புத்திசாதுரியமானதுமான பங்குகொண்டபோதிலும், கல்வி போதிப்பவரின் கடமைகளை அவன் மேற்கொள்ள முடியாது. அவன் ஒரு சர்வகலாசாலை மாணவனாக இருக்கும் வரையில் சர்வகலாசாலையின் கட்டுப்பாட்டுக்கு அடங்கியே அவன் நடக்கவேண்டும்;

இல்லையெனின் எந்தக் கல்வி ஸ்தாபனமும் ஒழுங்காக நடைபெற முடியாது. ஒரு மாணவனுக்கு இளமையில் கல்வி சரிவரப் போதிக்கப்பட்டிருந்தால், அவன் சர்வகலா சாலைக் கட்டிடத்துக்கு வரும்பொழுது சுய கட்டுப்பாட்டுப் பழக்கத்தில் அவன் உயர்ந்த நிலையையடைந்திருப்பான். எனவே அனாவசிய தடைகளை அவன் மீது சர்வகலாசாலை விதிக்க வேண்டிய அவசியமிருக்காது. துரதிருஷ்டவசமாக விஷயம் இப்படியில்லை. இக்காரணத்தினால்தான் வகுப்புகளுக்கு வருவது, கட்டாய தேகப் பயிற்சி, தேசீய மாணவர் படைப் பயிற்சி, இன்னும் பல காரியங்கள் சம்பந்தமாகப் பல சட்ட திட்டங்களை சர்வகலாசாலை அதிகாரிகள் ஏற்படுத்தி அமுல் நடத்த வேண்டியதிருக்கிறது.

இவ்விதக் கட்டுப்பாடுகள் தொந்தரவாக இருக்கின்றன. எனவே, தொழிலாளர் சங்கங்கள் எப்படி வேலை நேரக் குறைவுக்கும், அதிக ஊதியத்துக்கும் அடிக்கடி கிளர்ச்சி செய்கின்றனவோ, அதேபோல் மாணவர்கள் சங்கங்கள் இவைகளை எதிர்த்து அடிக்கடி கிளர்ச்சிகள் நடத்துகின்றன. ஆனால் இந்த உபமானம் ஒப்புக்கொள்ளக்கூடியதல்ல. முதலாளித்துவ முறையில் முதலீடு செய்துள்ளோர் தம்மால் கூடிய வரையில் தொழிலாளரைச் சுரண்டவே செய்ய முற்படுவார்கள். ஆகையினால் தொழிலாளர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளக் கூடிய ஒரே ஆயுதம் கூட்டு பேரம், வேலை நிறுத்தம் செய்வதாகப் பயமுறுத்துதல் அல்லது வேலை நிறுத்தம் செய்துவிடல். ஆனால் கல்வி ஸ்தாபனம் கல்வி போதிப்பவருக்கு லாபம் கிடைப்பதற்கான முதலாளித்துவ அமைப்பு அல்ல. அதற்கு மாறாக, இதன் முழு நோக்கமும் கற்போரின் நலமே. சர்வகலா சாலை அல்லது கல்லூரியினால் வகுக்கப்பட்டிருக்கும் விதிகளின் லட்சியம் மாணவர்களுக்கு நற்பயிற்சியும், நல்லொழுக்கத்தையும் நல்குவதேயாகும். பெரும் ஆர்ப்பாட்டங்கள்,

வேலை நிறுத்தங்கள் செய்வதாக மிரட்டுதல், பட்டினி கிடப்பதாகப் பயமுறுத்துதல் போன்ற உபாயங்களால் இவ்விதிகளை மாற்றவோ அல்லது நீக்கவோ முயற்சிப்பது தற்கொலை செய்து கொள்வதற்கொப்பாகும். இவ்வித காரியங்களினால் பெரிதும் தீங்கிழைக்கப்படுபவர்கள் மாணவர் சமூகந்தான்.

தங்கள் குறைகள் எவ்வளவு நியாயமானவையாக இருந்தால்கூட அவற்றின் பரிகாரத்துக்காக மாணவர்கள் கையாளுவதற்கான வழிகள் ஒன்றும் கிடையாதாவென்று என்னைக் கேட்கலாம். அவர்கள் குறைகள் நிவர்த்திக்காகப் பாடுபட வேண்டியதுதான். ஆனால் அவர்களின் முறையீடுகள் சட்டரீதியான வழியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இத்துடன் கூட்டு நடவடிக்கை எடுக்கப் போவதாக எவ்வித மிரட்டலையும் சேர்க்கக் கூடாது. இவ்விதம் சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோள்களைக் கல்லூரித் தலைவரோ அல்லது சர்வகலாசாலை இலாகாவினரோ சாந்தத்துடனும் அனுதாபத்துடனும் கேட்கவேண்டும். அவர்களின் கோரிக்கைகள் நியாயமானவையாயிருந்தால், தம் அதிகாரத்திக்குட்பட்ட விஷயமாக இருந்தால் தாமே அதைப் பரிகாரம் செய்யவேண்டும். இல்லையெனின் உயர்தர அதிகாரிகளின் மூலம் நிவாரணம் கிடைக்கும்படி செய்ய வேண்டும். அநேக தடவைகளில் கல்வி போதனைக்குப் பொறுப்பானவர்களாகிய நாம் நியாயமான புகார்களை, காட்ட வேண்டிய அனுதாபத்துடன் கேட்கத் தவறி விடுகிறோம் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அந்த அளவுக்கு மாணவர் ஸ்தாபனங்கள் தீவிரமான முறைகளை மேற்கொள்ளுவதற்கு நாமும் பொறுப்பாளிகள் என்றுதான் சொல்லவேண்டும்.

தொழிலாளர் சங்கங்கள் போல் இயங்குவதற்குக்கூட மாணவர் சங்கங்களுக்கு உரிமையில்லை என்னும்போது,

இவை பரிபூரண சட்ட நிரூபண சபையின் அதிகாரத்தை ஆக்கிரமித்துக் கொள்ள உரிமை ஏது? பெரும்பாலான கல்லூரிகள், சர்வகலாசாலைகள் மாணவர் சங்கங்களின் அமைப்பு நமது நாட்டில் அரசியலமைப்பைப் போல் நிர்ண யிக்கப்பட்டிருப்பது மிகவும் வருந்தத் தக்கதொரு விஷய மாகும்.

கல்வி ஸ்தாபனங்கள் சர்க்காரால் அல்லது தனிப்பட்ட நிர்வாகத்தினரால் ஏற்படுத்தப்படுகின்றன. இவை மாண வர்கள் மீது விதிக்கப்படும் வரிகள் மூலம் பராமரிக்கப்பட வில்லை. செலவு முழுமையும் மாணவர்கள் கொடுக்க வில்லை. மாணவர்கள் சம்பளம் கொடுக்கிறுர்கள் என்பது உண்மைதான். ஆனல் சிறிய வகுப்புக்களை மட்டும் வைத்து நடத்தும் கல்வி ஸ்தாபனங்கள் விஷயத்தில் தவிர மற்றவை சம்பந்தத்தில் இந்தப் பணம் செலவழிக்கப்படும் தொகையில் மிகச் சிறிய பகுதியேயாகும். மனித சமுதா யத்தில் கல்வியின் நோக்கம் பற்றி எவ்வளவோ சொல்லப் பட்டிருப்பதால் இதுபற்றி விரிவாக விளக்க வேண்டிய அவசியமில்லை. இங்கு வற்புறுத்த வேண்டியது என்ன வென்றுல் சர்வகலாசாலைகள் கல்வி அளிக்கப்படுவதற்குத் தேவைப்படும் பணத்தைக் கொடுக்க வேண்டிய பொறுப்பு சர்க்காருடையதாக இருந்த போதிலும் இது சர்க்காரின் நேரடி ஆதிக்கத்திற்குட்பட்டிருக்கக் கூடாது. இதன் அதி காரம், கல்வி போதனையைத் தொழிலாகக் கொண்டுள்ள வர்கள் பெரும்பாலும் அடங்கிய சுயேச்சையான ஸ்தா பனங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் சர்வகலாசாலைக் கல்வியின் உண்மை லட்சியங்க ளான தனிப்பட்டோரின் சுயேச்சையான வளர்ச்சியும், அறிவு, கலாசார வளர்ச்சியும் ஒருங்கே நடைபெறும். ஆனல் இதற்குப் பாடத்திட்டங்கள், பரீட்சை முறைகளை மாணவர் மன்றங்கள் தான் உருவாக்க வேண்டுமென்றே

அல்லது சர்வகலாசாலே ஸ்தாபனங்களின் நிர்வாகத்தில் இவ்வ கலந்துகொள்ள வேண்டுமென்ருே. அர்த்தமில்லே. இம்மாதிரி ஏற்பட்டால் கலவரமான நிலைமைதான் ஏற்படும்; கல்விபோதனே நடைபெற முடியாது.

மாணவர்கள் சங்கங்களுக்கு எழுத்து மூலலமான அல்லது முறையான அமைப்பை அளிப்பதை நான் எதிர்க்கிறேன். மாணவர் சங்கங்களின் நோக்கம் அதிகாரத்தைப் பெற்று அமுல் நடத்துவதல்ல; ஆனுல் பாடத் திட்டங்களுக்குப் புறம்பானதும் அனுசரணேயானதுமான பல விஷயங்களில் பயிற்சி பெற வாய்ப்புக்கள் அளிப்பதுதான் இவற்றின் வேலே. இந்த நோக்கம் ஈடேற வேண்டுமானுல் மாணவர் சங்கம், கல்வி ஸ்தாபனத்தின் கீழ் அதன் மேற்பார்வைக்கும், கட்டுப்பாட்டுக்கும் அடங்கி இயங்கும் ஒரு பகுதியாகவே இருக்கவேண்டும். அதிகாரத்தைச் செலுத்துவதில் இது ஒரு போட்டி ஸ்தாபனமாக இருக்கக் கூடாது. ஆகையினுல் மாணவர் சங்கங்களின் உரிமைகள் முதலியன நாளாவட்டத்தில் சம்பிரதாயங்களின் மூலம் வளர வேண்டுமேயொழிய சட்ட ரீதியானதும், வரையறைக்குட்பட்டதுமான அமைப்பு மூலம் வழங்கப்பட்டவையாயிருக்கக் கூடாது. இவைகளுக்குச் சட்டதிட்டமான ஓர் அமைப்பு அளிக்கப்பட வேண்டுமானுல் இது சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு மாற்றியோ, கூட்டியோ குறைத்தோ செய்துகொள்ளக் கூடிய தன்மையதாக இருக்க வேண்டும். அத்துடன் முடிவான அதிகாரம் கல்லூரித் தலேவரிடமோ அல்லது சிண்டிகேட் அல்லது செனட்டின் சார்பாக அதிகாரம் செலுத்தும் உப-அத்யட்சரிடமோ இருக்க வேண்டும்.

கல்லூரித் தலேவரின் மேலே கூறியபடி அமையும் பூரண அதிகாரமும், அதே போன்ற உபஅத்யட்சருக்குள்ள அதிக அதிகாரமும் பலனளிக்க வேண்டுமானுல்,

கல்லூரித் தலைவர் மாணவர்களின் நன்னம்பிக்கையைப் பெற்றிருப்பதுடன், கல்லூரி நிர்வாகங்களின் நன்னம்பிக்கைக்கும் பாத்திரமானவராகவும் இருக்க வேண்டும். உப அத்யட்சர், சர்வகலாசாலை சட்ட நிரூபண காரிய ஸ்தாபனங்களின் நன்னம்பிக்கையை உடையவராக இருத்தல் வேண்டும்.

பெரும்பான்மையான சர்வகலாசாலைகளில் கட்சி மனப்பான்மை, வகுப்புவாதங்கள், கோஷ்டிகள் போன்ற ஆட்சேபகரமான தீமைகள் மலிந்து கிடப்பது துர்ப்பாக்கியமான விஷயந்தான். இது பற்றி ராதாகிருஷ்ணன் யாதாஸ்து நன்கு விளக்கியிருக்கிறது. இதுசம்பந்தத்தில் இதில் கூறப்பட்டிருக்கும் சிபாரிசுகள் எவ்வளவு விரைவில் நிறைவேற்றி வைக்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கு மாணவர்களிடையே மறுபடியும் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலைநாட்டலாம்.

# செய்திக் கோவை

---

**யானைப் பரிசுகள்**

ருஷ்யாவில் மாஸ்கோவிலுள்ள மிருகக் காட்சி சாலைக்கு இந்தியப் பிரதம மந்திரி நேரு இரண்டு யானைகள் பரிசளிப்பதாகக் கூறினர். ஒரு யானை மைசூரிலிருந்தும், மற்ரெரு யானை குடகிலிருந்தும் அனுப்பப் பெறும்.

கானடாச் சிறுவர்களுக்காக நேரு அளித்த 'அம்பிகா' என்னும் யானைக் குட்டி கொச்சியிலிருந்து கானடாவுக்குக் கப்பலில் சென்றது.

**பாகிஸ்தான்**

வடமேற்கு எல்லைப்புற கவர்னர், சர்தார் அப்துர் ரஷீதைப் பிரதம மந்திரியாகக் கொண்ட மந்திரி சபையைக் கலைத்துவிட்டார். சர்தார் அப்துர் ரஷீத் ஒருறுப்புத் திட்டத்தை எதிர்த்ததற்காகவே பாகிஸ்தான் அரசாங்கம் இத்தகைய நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது. சர்தார் அப்துர் ரஷீத் எல்லைப்புற முஸ்லிம் லீகின் தலைவர் பதவியையும் ராஜிநாமாச் செய்துவிட்டார்.

சிந்துவின் பிரதம மந்திரி ஸ்ரீ எம். ஏ. குர்ரோ சமீபத்தில் சிந்து சட்டசபை உப–தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனல் அவருடன் போட்டியிட்ட நான்கு அபேட்சகர்களும், தாங்கள் கடத்திச் செல்லப்பட்டு, தாக்கப்பட்டு சட்ட விரோதமாக அடைத்துவைக்கப்பட்டதாக குர்ரோ மீது குற்றம் சாட்டி தனித் தனியாக நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்றனர்.

பாகிஸ்தான் ரூபாயின் நாணய மாற்று மதிப்பைக் குறைத்திருப்பதாக பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்தது. 1949–ஆம் வருஷத்தில் பிரிட்டன், இந்தியா முதலிய நாடுகள் தங்கள் செலாவணியின் டாலர் மதிப்பைக் குறைத்தபொழுது பாகிஸ்தான் குறைக்கவில்லை. ஆறு வருஷத்துக்குப் பிறகு பொருளாதார காரணங்களுக்காக இவ்வாறு முடிவு செய்ததாக அது கூறுகிறது. இந்த ஆறு வருஷ காலமாக, இந்திய ரூபாயை விட அதிக மதிப்புடன் இருந்த பாகிஸ்தான் ரூபாய், இந்த முடிவின் காரணமாக இந்திய ரூபாயின் மதிப்புக்குச் சமமாகிவிட்டது.

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் ஸ்ரீ குலாம் முகமது தமது உடல் நலக் குறைவின் காரணமாக இரண்டு மாதம் ஓய்வு பெற விரும்புவதால், பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரி மேஜர் ஜெனரல் இஸ்கந்தர் மிர்ஜா 'ஆக்டிங் கவர்னர்-ஜெனரலாக' நியமிக்கப்பெற்றுள்ளதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப் பெற்றது.

அரசியல் அமைப்பு வேலைகள் முடிந்துவிட்டதால், அரசியல் சம்பிரதாயத்தை யொட்டிப் பிரதம மந்திரி ஸ்ரீ முகமதலி தமது ராஜிநாமாவைச் சமர்ப்பித்தார்.

பாகிஸ்தான் நிதி மந்திரியாக இருந்த ஸ்ரீ சௌத்திரி முகமதலியை, அரசியல் நிர்ணய சபை முஸ்லிம் லீக் கட்சி தனது தலைவராகத் தேர்ந்தெடுத்தது.

புதிய அரசியல் நிர்ணய சபையில் உள்ளது எண்பது ஸ்தானங்கள். முப்பத்தைந்து முஸ்லிம் லீக், பன்னிரண்டு அவாமி லீக், ஏனைய ஸ்தானங்கள் ஐக்கிய முன்னணிக் கட்சிக்கு.

முஸ்லிம் லீக், அவாமி லீக்குடன் கூட்டு மந்திரிசபை அமைப்பதற்காக பேச்சு வார்த்தைகள் நடத்தியது; ஆனால் வெற்றி பெறவில்லை.

ஐக்கிய முன்னணிக் கட்சியுடன் கூட்டு சேர்ந்து, முஸ்லிம் லீக் ஸ்ரீ சௌத்திரி முகமதலி தலைமையில் மந்திரி சபை அமைத்தது. பதினொரு மந்திரிகளில் ஆறு பேர் முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்கள். ஐவர், ஐக்கிய முன்னணிக் கட்சியினர். இக் கட்சியின் தலைவர் ஸ்ரீ ஏ. கே. பஸ்லுல் ஹக் உள்நாட்டு மந்திரியாகப் பதவி ஏற்றார். டாக்டர் கான் சாகேப்புக்கு தபால் தந்தி இலாகாவுடன் சமஸ்தானங்கள், எல்லைப் பகுதிகள் இலாகாக்களும் அளிக்கப் பெற்றன. கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்த ஸ்ரீ காமினி குமார் தத்தர், சட்ட மந்திரியாக நியமிக்கப் பெற்றார்.

## எல்லைப்புற காந்தி

எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார்கான், பாகிஸ்தான் தோன்றியதிலிருந்து பெரும்பகுதி சிறைச்சாலையிலேயே இருந்திருக்கிறார். சிறிது காலத்துக்கு முன் அவர் விடுதலையடைந்த பின்னர், அவர் தமது சொந்த வடமேற்கு எல்லைப்புற மாகாணத்துக்குப் போக முடியாதபடி தடைகள் விதித்தார்கள். என்றாலும் கபார்கான், பாகிஸ்தானின் பெருந் தலைவர்களில் ஒருவராகவே கருதப்பெறுகிறார். அதிகாரிகளும் அபிப்பிராய பேதமுள்ள அரசியல் வாதிகளும் கூட கபார்கானின் கருத்தையறிய விரும்புகிறார்கள்.

ஜூலை மாதம் பதினேழாம் தேதியன்று கபார்கான், பஞ்சாப் மாகாணத்திலிருந்து எல்லைப்புற மாகாணத்துக்குச் சென்றார். எல்லைப்புற மாகாணத்தில் அவர் காலடி எடுத்து வைத்ததும் இருபத்தொரு குண்டுகள் முழக்கி மக்கள் அவரை வரவேற்றனர். பெஷாவர் நகரில் கபார்கானுக்கு ராஜ வரவேற்பு அளிக்கப் பெற்றது. வீதிகளிலெல்லாம் தோரணங்கள் கட்டி அலங்கரித்திருந்தனர். பல சங்கங்கள் வரவேற்புப் பத்திரங்கள் அளித்தன.

பெஷாவருக்கு நாற்பது மைல் தூரத்திலுள்ள ஜஹாங்கிரா என்னுமிடத்தில் பேசுகையில், "எல்லைப்புறம் பட்டாணியர் நாடு; அவர்களே அங்கு ஆட்சி நடத்துவார்கள்" என்று கபார்கான் கூறினர். தமது சொந்தக் கிராமத்துக்குச் சென்றபொழுது, கிராம மக்கள் வீதிகளின் இருபுறங்களிலும் நின்று, "பாதுஷா கான் நீடூழி வாழ்க" என்று கோஷமிட்டு, மலர் மாலைகளை அணிவித்து மரியாதை செய்தனர்.

பெஷாவரில், எல்லைப்புற கவர்னரும், அப்பொழுது உள்நாட்டு மந்திரியாக இருந்த மேஜர் ஜெனரல் இஸ்கந்தர் மிர்ஜாவும் கபார்கானைச் சந்தித்து ஒருறுப்பு திட்டத்துக்கு கபார்கானின் ஆதரவை நாடினர்கள்.

கிழக்குப் பாகிஸ்தான் ஓருறுப்பாக இருக்கிறது. அதைப்போல மேற்குப் பாகிஸ்தான் அனைத்தையும் ஓர் உறுப்பாகச் செய்ய வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்தது. தற்பொழுது மேற்குப் பாகிஸ்தான் பல உறுப்புக்களாக இருக்கிறது.

இந்த ஒருறுப்புத் திட்டத்தை கபார்கான் பலமாகக் கண்டிக்கிறர். பொதுத் தேர்தல் மூலமோ அல்லது வாக்கெடுப்பு மூலமோ மக்கள் கருத்தையறியாமல் இவ்வாறு செய்வது ஜனநாயகத்துக்கு விரோதம் என்று கூறுகிறர்.

ஒருறுப்புக்குப் பதிலாக மேற்குப் பாகிஸ்தானில் மூன்றுறுப்பு யோசனை ஒன்றை கபார்கான் கூறினர்: (1) பஞ்சாப்–பகல்பூர், (2) சிந்துவும்–கான்பூரும், (3) எல்லை மாகாணமும்–பலுசிஸ்தானும். மக்கள் வாக்கெடுப்புக்கு அரசாங்கம் இணங்காவிட்டால் இந்த மூன்றுறுப்பு இருக்க வேண்டும் என்று கபார்கான் கூறுகிறர்.

ஒருறுப்பு விஷயமாக, கபார்கானின் ஆதரவைப் பெற அவருடைய மூத்த சகோதரர் டாக்டர் கான் சாகேப் செய்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

ஒருறுப்புத் திட்டத்தைப் பட்டாணியர் மீது பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை திணித்தால் எல்லை மாகாணத்தில் பெரிய மக்கள் கிளர்ச்சி உண்டாகும் என்றும், கபார்கானின் கீர்த்தி ஓங்கி யிருக்கிறது என்றும், அவர் பட்டாணியரின் பண்பாட்டைக் காக்க விரும்புவோரின் தலைவராகக் கருதப்படுகிருர் என்றும் அரசியல் வட்டாரத்தினர் கூறுகின்றனர்.

பாகிஸ்தான் தோன்றியதிலிருந்து எல்லைப்புறக் காந்தி அப்துல் கபார்கானைப் போலவே பல வருஷங்கள் சிறையிலிருந்து, பிறகு தடைகள் விதிக்கப் பெற்ற பலுச்சிஸ்தான் காந்தி' என்று அழைக்கப்படும் கபார் அப்துஸ் சமத்கான் இப்பொழுது தான் தமது சொந்த மாகாணத்துக்குச் செல்ல அனுமதிக்கப் பெற்ருர். 'பட்டாணியரின் இயற்கை உரிமைகளைப் பாகிஸ்தான் தலைவர்கள் மறுக்கக் கூடாது' என்று பலுச்சிஸ்தான் காந்தி எச்சரித்திருக்கிருர். எல்லைப் புறக் காந்தியும், பலுச்சிஸ்தான் காந்தியும் விரைவில் சந்திப்பார்கள் என்று தெரிகிறது.

மேற்கு பாகிஸ்தான் ஒருறுப்புத் திட்டத்தை எதிர்க்க எல்லைப்புறக் காந்தி கான் அப்துல் கபார்கான், மங்கி ஷரீப் பீர் சாஹிப் இருவருக்கும் மங்கி ஷரீபில் நடைபெற்ற அவாமி லீக்—செஞ்சட்டையினர் கூட்டு மகாநாடு அதிகாரமளித்தது.

எல்லைப்புறக் காந்தி மாகாணங்களுக்குள் பகைமையை வளர்க்கிருர் என்றும், இவ்வாறு தொடர்ந்து செய்தால் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் போவதாகவும் பாகிஸ்தான் அரசாங்கம் கூறியது.

## மலேயாவில் தேர்தல்

மலேயாவில் முதன் முதலாக நடந்த தேர்தலில் மலேயர், சீனர், இந்தியர் முக்கூட்டணிக்கு அமோக வெற்றி கிடைத்தது. மொத்தம் 52 ஸ்தானங்களில் 51 ஸ்தானங்கள் இக் கட்சிக்குக் கிடைத்தன. இஸ்லாமியக் கட்சிக்கு ஒரே ஒரு ஸ்தானம் கிடைத்தது, பிரதான எதிர்க்கட்சியாக இருக்குமென்று எதிர்பார்த்த 'நகாரா' கட்சிக்கு ஒரு ஸ்தானம் கூடக் கிடைக்கவில்லை.

முக்கூட்டணியின் தலைவரான மலேய இளவரசர் தென்கு அப்துல் ரஹமான் மந்திரி சபை அமைத்தார். இதில் ஆறு பேர் மலேயர், மூன்று பேர் சீனர், ஒருவர் இந்தியர். இந்த இந்தியரின் பெயர் ஸ்ரீ வி. டி. சம்பந்தம். முப்பத்தைந்து வயதுள்ள இந்த இளைஞர் தொழிலாளர் மந்திரியாக நியமிக்கப்பெற்றுள்ளார்.

## ஆப்பிரிக்கா

கிழக்கு ஆப்பிரிக்காவில் 'பயங்கரவாதிகள்' என்று கருதப்படும் 3097 சுதேசிகளின் (நீக்ரோக்கள்) நிலங்களை அரசாங்கம் பறிமுதல் செய்திருப்பதாக நைரோபியிலிருந்து ஒரு செய்தி கூறுகிறது.

இதுவரை நாடு கடத்தப்பட்டிருந்த புகாண்டா கபாகா (மன்னர்) கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள அவரது நாட்டுக்குத் திரும்ப பிரிட்டிஷ் அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

தென்னுப்பிரிக்காவில் பிரிட்டோரியாவிலும் விட்வாட்டர் ஸ்ராண்டிலும் உள்ள எல்லா இந்தியர்களும் சீனர்களும் வெளியேற்றப்பட வேண்டும் என்றும் இப்பிரதேசத்தை ஒரே இனத்தவர் வசிக்கும் பிரதேசமாக்க

வேண்டுமென்றும் பிரிட்டோரியா நகரசபை நில உரிமை ஆலோசனை சபைக்கு சிபார்சு செய்திருக்கிறது. விட்வாட்டர் ஸரான்டில் எழுபது மைல் கரையோர நகரங்களில் வசிக்கும் இந்தியர்களும், பிரிட்டோரியாவில் வசிக்கும் இந்தியர்களும் ஒரு புதிய நகரத்தில் குடியேற்றப்படுவர். பிரிட்டோரியா நகரம் தென்னாப்பிரிக்க சமஷ்டி அரசாங்கத்தின் தலைநகரம்.

## அமெரிக்காவும் சீனாவும்

இந்தியாவும் பர்மாவும் செய்த பூர்வாங்க முயற்சிகளினால் அமெரிக்க அரசாங்கமும் சீன அரசாங்கமும் நேரடியாகப் பேச்சு வார்த்தை நடத்த முன்வந்தன. ஜினிவாவில், ஐக்கிய நாடுகள் சங்கக் கட்டிடத்தில் அமெரிக்கப் பிரதிநிதியும் சீனப் பிரதிநிதியும் சந்தித்துப் பேசினர். இதன் பலனாக சீனாவில் சிறைப்படுத்தப் பெற்றுள்ள பதினொரு அமெரிக்க விமானிகளை சீன அரசாங்கம் விடுதலைசெய்தது.

## கார்டல் ஹல்

அமெரிக்காவின் முன்னாள் அரசாங்க மந்திரி கார்டல் ஹல் தமது எண்பத்து மூன்றாவது வயதில் காலமானார். இவர் இரு முறை மந்திரியாக இருந்து பதினொரு வருஷ காலம் பதவி வகித்திருக்கிறார்.

## சமையலுக்கு அணுசக்தி

அணுசக்தியினால் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை சரித்திரத்திலேயே முதன்முறையாக சமையல் வேலைக்கு உபயோகித்தது ஓர் அமெரிக்கப் பெண்மணியாகும். இந்த உணவைச் சாப்பிட்டவர்கள், உணவு ருசியாக இருந்ததென்றும், ஆனால் அதைத் தயாரித்த விதமே தங்களுக்கு பரபரப்பை ஊட்டியதாகவும் கூறினர்.

## பூதான இயக்கம்

ஆசார்ய விேைபா பாவே நடத்தி வரும் பூதான இயக்கத்துக்கு உதவி செய்ய இந்தியாவில் முன்னுள் அமெரிக்க தூதராக இருந்த ஸ்ரீ செஸ்டர் பவல்ஸ் அமெரிக்காவில் நிதி, திரட்ட உத்தேசித்துள்ளார். இந்தியாவைப் பற்றி ஸ்ரீமதி பவல்ஸ் செய்யும் பிரசங்கங்களுக்குக் கிடைக்கும் பணம் இந்த நிதிக்குச் சேரும்.

பிரபல இத்தாலிய பிலிம் டைரக்டரான ராபர்ட்டோ ரோஸல்லினி, பிரதம மந்திரி நேருவை ரோமாபுரியில் சந்தித்து விேைபாஜியின் பூதான இயக்கம் பற்றி தான் எடுக்க விருக்கும் படத்தைக் குறித்துப் பேசினுர். இப் படத்தில் ரோஸல்லினியின் மனைவியும் பிரபல நடிகையுமான இன்கிரிட் பெர்க்மென் பிரதான பாகத்தில் நடிப்பாரென்று தெரிகிறது.

## நேருவுக்குப் பட்டம்

மனித வர்க்கத்துக்கு சமாதான சேவை புரியும் நேருஜியின் தீரமான முயற்சியைப் பாராட்டுவதற்காக ராஷ்டிரபதி ராஜேந்திர பிரசாத் 'பாரத ரத்ன' என்ற பட்டத்தை வழங்கினுர். ராஷ்டிரபதி மாளிகையில் நடந்த விருந்து வைபவத்தில் ஆயிரக்கணக்கானபேர் கலந்துகொண்டனர்.

## அடுத்த பொதுத் தேர்தல்

அடுத்த பொதுத் தேர்தல்களை 1957-ம் வருஷம் ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில் நடத்திவிட வேண்டுமென்று தேர்தல் கமிஷனர் ஸ்ரீ சுகுமார் சென் கூறிய யோசனையை காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்டு, கம்யூனிஸ்டு, ஜனசங்கக் கட்சிப் பிரதிநிதிகள் அனைவரும் ஏற்றுக் கொண்டனர்.

## புதுச்சேரி தேர்தல்

புதுச்சேரிப் பகுதிகள் இந்தியாவுடன் இணைந்த பின்னர் முதலாவது பொதுத் தேர்தல் ஜூலை மாதம் பதினெட்டாம் தேதி ஆரம்பமாயிற்று. காங்கிரஸ் கட்சிக்குப் பெரும் வெற்றி கிடைத்தது. காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ பக்கிரிசாமிப் பிள்ளை ஆறு பேர் கொண்ட நிர்வாக சபை அங்கத்தினர்கள் பெயர்களை, புதுவை ராஜ்ய பிரதம கமிஷனர் ஸ்ரீ கேவல்சிங்கிடம் சமர்ப்பித்துப் பின் பதவி ஏற்றார்.

## இலக்கியங்களின் மலிவுப் பதிப்பு

தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென் இந்திய மொழிகளில் உள்ள இலக்கியங்களை, மலிவுப் பதிப்புக்களாக வெளியிட்டு மக்களிடையே ஏராளமாகப் பரப்பும் நோக்கத்துடன் "தென் இந்திய புத்தக டிரஸ்ட்" என்ற ஸ்தாபனம் விரைவில் சென்னையில் ஆரம்பமாகும்.

இந்த ஸ்தாபனத்தில், சென்னை, ஆந்திரா, திருவாங்கூர்–கொச்சி, அண்ணுமலை, ஹைதராபாத், ஸ்ரீ வேங்கடேஸ்வரா சர்வகலாசாலைகளின் உப அத்யட்சர்களும், உத்தியோகத் தொடர்பற்ற சிலரும் இருப்பார்கள். இந்த ஸ்தாபானம் செப்டம்பருக்கு முன் வேலையைத் தொடங்குமென்று தெரிகிறது.

தென் இந்திய மொழிகளிலுள்ள சிறந்த நவீன இலக்கியங்களும் புராதன இலக்கியங்களும் மலிவுப் பதிப்புக்களாக வெளிடப் பெறும். மற்ற நாடுகளின் முக்கியமான இலக்கியங்களும் மொழி பெயர்த்து வெளியிடப் பெறும்.

பிரசுரத்திற்குத் தகுதியான புத்தகங்களைத் தேர்ந்தெடுக்க ஆலோசனை சபைகள் அமைக்கப்பெறும். மலிவான புத்தகங்களைப் பெருத்த அளவில் வெளியிட முன்வரும் பிரசுரகர்த்தர்களுக்குக் கடன் வசதி அளிக்கப்படுமென்றும்,

விரிவான புத்தக விநியோக ஸ்தாபனம் ஆரம்பிக்க முன் வருபவர்களுக்கு பூர்வாங்க நிதி உதவி அளிக்கப் படும் என்றும் தெரிகிறது.

## உண்மையே கடவுள்

கடவுள், மோட்சம், தெய்வீக வழி ஆகியவை சம்பந்தமாக காந்தியடிகள் எழுதியிருக்கும் கட்டுரைகளைத் தொகுத்து "உண்மையே கடவுள்" என்ற தலைப்புடன் அகமதாபாத்திலுள்ள நவஜீவன் டிரஸ்டு என்னும் ஸ்தாபனம் ஒரு புத்தகம் வெளியிட்டிருக்கிறது. இதற்கு ராஜாஜி முன்னுரை எழுதியிருக்கிறார். ராஜாஜியே இப் புத்தகத்தைத் தமிழில் மொழிபெயர்த்துவருகிறார். இப்புத்தகத்தின் ஹிந்தி குஜராத்தி, மராத்தி மொழிபெயர்ப்புகளும் விரைவில் வெளிவரும் என்று தெரிகிறது.

## கோவா

புது டில்லியிலுள்ள போர்த்துக்கல் ஸ்தானிகர் காரியாலயத்தை ஆகஸ்டு எட்டாம் தேதியிலிருந்து மூடும்படி இந்திய அரசாங்கம் கூறியிருக்கிறது.

இந்தியாவுக்கும் கோவாவுக்கும் உள்ள ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுவிட்டது.

"மாறுபட்ட இப்போதைய நிலையில் போர்த்துக்கீசியர்கள் கோவாவில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருவது இந்தியாவின் அரசியல் நிர்வாகத்தில் தொடர்ந்து தலையிடுவதாகும்" என்று நேரு லோகசபையில் கூறினார்.

போர்த்துக்கீசிய ராணுவத் தலைவர் விமானத்தில் கோவாவுக்கு வந்திருக்கிறார்.

ஆகஸ்டு மாதம் பதினைந்தாம் தேதி சுமார் மூவாயிரம் சத்தியாக்கிரகிகள் கோவாவுக்குள் இந்தியக் கொடிகளை

ஏந்தி உற்சாகத்துடன் சென்றனர். போர்த்துக்கீசிய கவர்னர் ராணுவச் சட்டம் பிரகடனம் செய்திருக்கிறார்.

### பாபுராவுக்கு ஆறு வருஷம்

நாகப்பூரில் பிரதம மந்திரி நேருவைக் கத்தியால் குத்த முயன்ற பாபுராவ் என்ற ரிக்ஷாக்காரருக்கு, இ. பி. கோ. 337-வது பிரிவின் கீழ் ஆறு வருஷ கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றது. பாபுராவின் செய்கை 'பேய்த்தனமானது' என்று நீதிபதி குறிப்பிட்டார்.

# ரைட் சகோதரர்கள்

"அந்த இரண்டு இளைஞரையும் போய்ப் பாருங்கள்; அவர்கள் தாங்கள் கண்டு பிடித்ததைக் காட்டட்டும். அந்தப் பறக்கும் இயந்திரத்தால் யாதேனும் நன்மை விளையலாம்." என்று ஜனாதிபதி தியோடோர் ரூஸ்வெல்ட் தம்முடைய இராணுவக் காரியதரிசியிடம் சொன்னார்.

ஒரு நாள் மதிப்புமிக்க கர்னல் ஒருவர் அந்த இளைஞர் இருவரையும் பார்ப்பதற்கு டெய்ட்டன் நகருக்குப் போனார். "அந்தப் பறக்கும் இயந்திரம், வருங்காலத்தில் முக்கியமானதாக விளங்கும் என்று இராணுவத்திலுள்ள ஒருவரும் எண்ணவில்லை. ஆனால் ஜனாதிபதி உங்களைப் பார்க்கவேண்டுமென்று எங்களுக்குக் கட்டளையிட்டார். உங்கள் இயந்திரம் பறப்பதைக் காட்டுங்கள்." என்று அவர் சொன்னார்.

இருவரும், "நல்லது, அவ்வாறே செய்கிறோம்." என்று ஊக்கமாய்ச் சொன்னார்கள். இதற்கு முன் ஒரு முறை இந்த ரைட் சகோதரர்கள் இராணுவ அதிகாரிகளிடம் பறந்து காட்டுவதைப் பார்க்கவேண்டுமென்று கேட்டபோது இராணுவ அதிகாரிகள் முடியாது என்று சொல்லி விட்டார்கள்.

"இதனை நாங்கள் இரகசியமாக வைத்துக் கொள்வோம்." என்று அந்தக் கர்னல் சொன்னார்.

"ஏன், அவ்வாறு வைத்துக்கொள்ள வேண்டும்?" என்று வில்பர் ரைட் கேட்டார்.

"அது சரியாய் நடைபெறுவிட்டால்.......தரையி லிருந்து மேலே கிளம்பாவிட்டால், உங்களுக்கு அவமானம் ஏற்பட நாங்கள் விரும்பவில்லை" என்று கர்னல் சொன்னார்.

"அதைப் பற்றித் தாங்கள் கவலைப்பட வேண்டாம்." என்று வில்பர் ரைட் கூறினார்.

"ஆயிரம் பேர், பல்லாயிரம் பேர் பார்க்க வரட்டும்; அதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை." என்றார் அடுத்த சகோதரர்.

வெர்ஜினியாவிலுள்ள போர்ட் மயர் என்னும் இடத்தில் அவர்கள் பறந்து காட்டவேண்டுமென்று இராணுவ இலாகா ஏற்பாடு செய்தது. அங்கு பெருந்திரளாக மக்கள் கூடியிருந்தனர். சோதனை வெற்றியாக முடிந்தது. பெரிய ஜெனரல்களெல்லாம் அந்தச் சகோதரர்களைச் சூழ்ந்து கொண்டார்கள்.

"இந்த விமானத்தின் உரிமையை யாதேனும் வெளி நாட்டு அரசாங்கத்துக்கு விற்றுவிட்டீர்களா?" என்று ஒரு ஜெனரல் கேட்டார்.

"நாங்கள் அமெரிக்கர்." என்றார் ரைட் சகோதரர் களுள் ஒருவர்.

"நீங்கள் நாளைக்கு இராணுவக் காரியதரிசியைப் பார்க்க முடியுமா?" என்று அந்த ஜெனரல் மிகவும் மரியாதையாகக் கேட்டார். அவர்கள் பார்ப்பதாகச் சொன்னார்கள்.

ரைட் சகோதரர்கள் முதலில் செய்த விமானம் கிளைடர் விமானம். அது காற்றாடி போல் பறந்தது. அவர்கள் இருவரும் சைக்கிள் கடை வைத்திருந்தார்கள். அவர்களே கிளைடர் செய்தார்கள். கீழேயிருந்து கயிறுகள் மூலமாய் அதை நடத்தினார்கள். இதனால் பறப்பது பற்றிய நுட்பங்களை அவர்கள் அறியலானார்கள்.

அதன்பின் மனிதனை ஏற்றிக் கொண்டு பறக்கும் விமானம் ஒன்றை அவர்கள் செய்தார்கள். ஆபத்து இல்லாமல் பறந்து பார்ப்பதற்காக 1900 ஆம் ஆண்டில் வட கரோலினுவிலுள்ள தனிமையான இடம் ஒன்றிற்கு அவர்கள் போனார்கள். அங்கே உயர்ந்த மணல் மேடுகள் இருந்தன. விபத்து நேர்ந்தாலும் ஆபத்தில்லாமல் இறங்கக் கூடிய இடம் இருந்தது,

கிளைடரில் பறந்து பார்த்தபின் என்ஜின் செய்து அதன் சக்தியால் கிளைடரில் பறக்க வேண்டுமென்று அவர்கள் கருதினார்கள். அந்த என்ஜின் பளுவில்லாததாக இருக்கும்படி செய்ய நினைத்தார்கள். இரும்புப் பேழையில் என்ஜினை அமைக்காமல், இரும்புக்குப் பதிலாக அலுமினியத்தை உபயோகிக்க எண்ணினார்கள்.

அந்த என்ஜின் எட்டுக் குதிரைத் திறன் கொண்ட வன்மையுள்ளதாக விளங்கிற்று. அதற்கு நான்கு சிலிண்டர்கள் இருந்தன. அவர்கள் தங்கள் கிளைடரையும் சீர்திருத்தம் செய்து வட கரோலினுவுக்குப் போய்ப் பறந்து பார்த்தார்கள்.

1903 ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 17 ந் தேதி காலையில் பறந்து பார்க்க வேண்டுமென்று அவர்கள் தீர்மானித்தார்கள். உலக வரலாற்றில் அது ஒப்பற்ற நாளாகக் கொள்ளப்படும் என்பதை அன்று அவர்கள் அறியவில்லை.

ரைட் சகோதரர்கள், ஆடம்பரமில்லாமல் அமைதியாக இடைவிடாமல் செய்த முயற்சி பயன் விளைத்தது. விமான வரலாற்றில் அவர்கள் பெயர்கள் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப் பெற்றுள்ளன.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

JL

தி

# நியூ கார்டியன் ஆப் இந்தியா

## லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(ஸ்தாபிதம் 1934)

**மற்றொரு மகத்தான வெற்றி!**

**1954-ம் ஆண்டில் முன்னேற்றம்!**

| | | |
|---|---|---|
| புதிய பிரபோசல்கள் | ரூ. 107 | லட்சத்துக்கு மேல் |
| பூர்த்தி செய்த வியாபாரம் | ரூ. 90 | லட்சத்துக்கு மேல் |
| அமுலிலுள்ள மொத்த அஷ்யூரன்ஸ் | ரூ. 380 | லட்சத்துக்கு மேல் |
| ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் நிதி | ரூ. 87 | லட்சத்துக்கு மேல் |

கம்பெனி பாலிஸிதாரர்களின் நலனுக்காக மிகத் திடமான அடிப்படையில் ரிஸர்வ்களை வைத்திருக்கிறது.

கம்பெனியின் செல்வாக்குக்கு முக்கிய காரணம், சரளமான பாலிஸி நிபந்தனைகளும், கணிசமான போனசும், உரிமைகளுக்கு உடனுக்குடன் பணம் கொடுப்பதுமே யாகும்.

முன்னேற்றமான இக் கம்பெனியில் ஒரு பாலிஸி எடுப்பது ஒரு நல்ல ஆஸ்தி; இக் கம்பெனியில் ஏஜன்ஸி எடுப்பது பயனுள்ள வியாபாரத் தொடர்பு.

**தி நியூ கார்டியன் ஆப் இந்தியா**

**லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

தலைமைக்காரியாலயம் : யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்பிளனேட் — சென்னை 1

KUMARI MALAR REGD. NO. M

புதிய பிரயாண நூல்

# மலேயா முதல் கானடா வரை

'உலகம் சுற்றும் தமிழ்'
ஏ. கே. செட்டியார்
எழுதியது

மலேயா, சிங்கப்பூர், இந்தோனேஷியா—ஜாவா, பாலி, சுமத்ரா—, ஆஸ்திரேலியா, பீஜித் தீவுகள், கானடா முதலிய நாடுகளில் பிரயாண அனுபவங்கள்.

விலை ரூபாய் ஐந்து